
# பெர்னார்ட்ஷா உதிர்த்த முத்துக்கள்



பிஎல். முத்துக்குமரன்

# பெர்னார்ட்ஷா உதிர்த்த முத்துக்கள்

பெர்னார்ட்ஷா கூறிய
சுவையான 150 நிகழ்ச்சிகள்

சேகரித்துத் தொகுத்தவர்
பிஎல். முத்துக்குமரன்

பிருந்தாவனம்

323/10, கதிரவன் காலனி
அண்ணா நகர் மேற்கு,
சென்னை – 600 040.

## BIBLIOAGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Bernartsha<br>Uthirtha Muthukkal |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition December 2005 |
| Edited by | : | PL. Muthukkumaran |
| Paper used | : | White Printing 10.5 Kg. |
| Size of the Book | : | Crown 18.5 X 12.5 Cms. |
| Type Point | : | 12 Point |
| No. of Pages | : | 96 |
| No. of Copies | : | 1000 |
| Publisher | : | **Brindavanam**<br>323/10, Kathiravan Colony,<br>Anna Nagar West,<br>Chennai - 600 040.<br>Phone : 26163596 |
| Printed at | : | Zion Printers, Chennai - 28 |
| Binding | : | Section Stitching |
| Price | : | **Rs. 25.00** |
| Subject | : | Great Sayings |

## மகிழ்ச்சி அளிக்கும் முத்துக்கள்

அருளாளர்கள், ஞானிகள், அறிஞர்களின் எழுத்துக்களை படிக்கும்போது நமக்கு ஊக்கமும் உற்சாகமும் உண்டாகும். பேரறிஞர் பெர்னார்ட்ஷா அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பலதரப்பட்ட வாசகர்கள், நண்பர்களுக்கு பதில் அளிக்கும் போது கூறிய 150 சுவையான முத்துக்கள் ஒருசேர இங்கு தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது

– பிஎல். முத்துக்குமரன்

# சூடும் சுவையும்

பெர்னார்ட்ஷாவிற்கு ஒரு கண்ணாடிப் பூந்தொட்டியைப் பரிசாகக் கொடுத்து, மேஜைமீது வைத்து விட்டுப் போனார் அவரது நண்பர் ஒருவர். அவர் மறுமுறை வந்தபோது, அந்த பூந்தொட்டி அதே இடத்தில் வைத்தபடியே இருந்தது. அதில் பூவே வைக்கப்படவில்லை.

'என்ன, பூந்தொட்டியை வெறுமனே வைத்திருக்கிறீர்கள்? உங்களுக்குப் பூக்களைக் கண்டால் பிடிக்காதோ...' என்று கேட்டார் நண்பர்.

அதற்கு, 'எனக்குக் குழந்தைகளைக் கூடத்தான் ரொம்பப் பிடிக்கும். அதற்காகத் தெருவில் காணும் குழந்தைகள் அத்தனை பேருடைய தலையையும் வெட்டி வந்து மேஜை மேல் வைத்து விடுவதா?' என்று பதிலளித்தார் ஷா!

இம்மாதிரியான சூடும் சுவையும்
நிறைந்த 150 நிகழ்ச்சிகளின் குவியல்

## அவகாசமே இல்லாதவர்

ஷாவிடம், "உங்கள் நாடகங்களில், நீங்கள் மிகவும் விரும்புவது எது?" என்று ஒருவர் கேட்டார்.

"என்னுடைய நாடகங்கள் பந்தயக் குதிரைகள் அல்ல. ஒருமுறை அவற்றை எழுதி முடித்துவிட்ட பிறகு, மீண்டும் அவற்றைப்பற்றி நினைப்பதற்கே எனக்கு அவகாசம் இருப்பதில்லை" என்று பதில் அளித்தார் ஷா.

## ஒரு வார்த்தை

ஷாவின் ஒரு வார்த்தைக்குப் பதிப்பாளர்கள் 5 ஷில்லிங் வீதம் பணம் தருகிறார்கள். இதை அறிந்த ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி மாணவர்கள் சிலர், ஷாவுக்கு 5 ஷில்லிங் அனுப்பி வைத்து, "ஏதாவது எழுதுங்கள்" என்று கேட்டார்கள். அதற்கு என்ன எழுதுவது?

ஷா, "வந்தனம்" (Thanks) என்று எழுதி அனுப்பினார். மாணவர்கள் ஏமாந்தனர்.

## புத்திசாலிகளின் வருகை

அயர்லாந்துக்காரர்கள் லண்டனுக்குக் குடியேறியவாறு இருந்தார்கள். அரசியல்வாதி ஒருவர், அயர்லாந்துக் காரர்களின் வருகையைப் பற்றி வெறுப்போடு ஷாவிடம் கூறினார்.

"புத்திசாலிகள் அப்படித்தான் வந்துகொண்டு இருப்பார்கள்" என்று ஷா பதில் அளித்தார்.

ஷாவும் ஒரு அயர்லாந்து வாசிதான்!

## வேண்டாத கேள்விகள்

ஷாவைப் பார்த்து, பத்திரிகை நிருபர் ஒருவர், 'உங்களைப் பிரிட்டனுக்கு சர்வாதிகாரியாக்கி விட்டால், நீங்கள் என்ன செய்வீர்கள்" என்று கேட்டார்.

அதற்கு ஷா, "அநேகமாக நீரோவைப்போல வெறியனாகி விட்டாலும் ஆகிவிடுவேன். ஏன் இப்படி சில்லரைத் தனமான கேள்விகளைக் கேட்கிறீர்கள்?" என்று பதில் அளித்தார்.

## சக்தி வாய்ந்தவர்

ஷாவின் நண்பர்கள் சிலர், பார்லிமெண்ட் தேர்தலுக்கு அவரை நிற்கச் சொன்னார்கள்.

"பார்லிமெண்டுக்குள் இருக்கும் நூறு உறுப்பினர்களை விட, வெளியேயிருக்கும் ஒரு ஷா அதிக சக்தி வாய்ந்தவன்" என்று கூறி தேர்தலுக்கு நிற்க மறுத்துவிட்டார் அவர்.

தன் பலத்தையும், செல்வாக்கையும் நன்கு உணர்ந்திருக்கிறார் ஷா.

## பயனுள்ள பிரசாரம்

காந்தியடிகளின் புதல்வர் தேவதாஸ் காந்தி மேல்நாடு சென்றிருந்தபோது ஷாவைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தார். மதுவிலக்கு பற்றிய கேள்விக்கு "உங்கள் நாட்டில், மதுவிலக்கு சம்பந்தமாகப் பலத்த பிரசாரம் செய்வதைவிட, மக்களிடம் சென்று உங்கள் ஷா மதுவைக் கையாலும் தொடுவது இல்லை' என்று கூறுங்கள். அதன் விளைவு உங்கள் பிரசாரத்தைவிடப் பன்மடங்கு அதிகப் பயன் உள்ளதாக இருக்கும்" என்றார் ஷா.

ஷாவின் பதில் தற்பெருமையை தன்னம்பிக்கையைப் பறைசாற்றுவதாக இருக்கிறது.

## திருமண அன்பளிப்பு

நண்பர் ஒருவருடைய திருமணத்துக்கு அழைப்பு வந்தது ஷாவுக்கு.

“தம்மிடம், திருமண விழாவுக்குத் தகுந்த உடை இல்லாத காரணத்தால் வர இயலவில்லை என்றும் வருவதாக இருந்தால், புதிய உடை தைப்பதற்காகும் செலவுத் தொகையை செக்காக இத்துடன் சேர்த்து அனுப்பியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## அது ஒரு பாவம்

பந்து விளையாட்டுக்களை விரும்பாத ஷா, குத்துச் சண்டைகளைப் பார்த்துக் களித்திருக்கிறார். அதில் அவருக்குச் சிரத்தை உண்டாயிற்று.

நூல் நிலையத்துக்குச் சென்று, குத்துச் சண்டை பற்றிய நூல்களைப் படித்தார். பிறகு, அதில் தமக்குள்ள அக்கறையே ஒரு வகையான பாவம் என்ற முடிவுக்கு வந்தார்.

## களவு போனால் கவலை இல்லை

ஷாவின் வீட்டில் ஒருமுறை கொஞ்ச ரூபாய் திருட்டுப் போயிற்று. அதைப்பற்றி போலீசாரிடம் புகார் கூற வேண்டும் என்று அக்கம்பக்கத்திலிருப்போர் தூண்டினார்கள். அவர்களிடம் ஷா கூறியவை:

“புகார் ஏன் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டால் பிறரிடமிருந்து அவன் மறுபடியும் திருடாமல் இருப்பதற்காக

என்ற காரணம் கூறுவீர்கள். இந்தப் பழக்கத்தைக் கையாண்டு திருடர்களைப் பிடித்து தண்டித்து என்ன நன்மையைக் கண்டோம்? இப்பொழுது என்னிடமிருந்த கொஞ்ச ரூபாய் களவு போனதுதான் கண்ட பலன். பழைய நடைமுறையானது திருட்டைத் தடுக்கவில்லை. அதனால் என்ன உண்டாகிறது? திருடன் சில ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டு அவதியுறுகிறான். பிறகு, தண்டனைக் காலம் முடிந்து, முன்னைக்காட்டிலும் தீயவனாக வெளியே வருகிறான். பிறகு வேலை இல்லாமல் திண்டாடுகிறான், மீண்டும் பழைய திருட்டுத் தொழிலையே சாமர்த்தியமாகச் செய்ய முற்படுகிறான் இவ்வளவுதான். திருடனைப் பிடித்துத் தண்டிப்பதற்காக உள்ள நடைமுறைகளைப் பார்த்தால், இந்தத் தொல்லையே வேண்டாம் என சும்மா இருந்து விடுவது நல்லதாகத் தோன்றுகிறது. ஏனெனில் புகார் எழுதிக்கொடுத்து, வழக்குத் தொடுத்து, சாட்சியங்களைக் காட்டி தொல்லைப் படுவதைவிட, அந்த நேரத்தை பயனுள்ள முறையில் கழித்து, அந்த ரூபாயையும் சம்பாதித்துக் கொள்ளலாம்" என்று கூறினார் ஷா.

## தப்பியோடிய கைதிக்கு அனுதாபம்

"சிறையிலிருந்து கைதி ஒருவன் தப்பி ஓடிவிட்டான். அவனைக் காவலர்கள் மீண்டும் பிடித்து, தண்டனை கொடுத்தனர்" என்ற செய்தி பத்திரிகையில் வெளிவந்தது.

அதைக் கண்ணுற்ற ஷா, பத்திரிகாசிரியருக்குப் பின்வருமாறு எழுதினார்:

"சிறை அதிகாரிகள் தங்களுடைய கவனக் குறைவுக்காக கைதியைக் காட்டுமிராண்டித்தனமாக பழி வாங்குகிறார்கள். அந்தக் கைதி முன்பு தண்டிக்கப்பட்டது சிறையில் அடைக்கப்படுவதற்காகவே தவிர, தன்னைத் தானே சிறைப்படுத்திக் கொள்வதற்காக அல்ல. பிறர் காவல் புரியும்போது, அதிலிருந்து கைதி தப்பித்துக் கொள்வதற்கு உரிமை உண்டு. விளையாட்டுத் துறையில் உள்ள சாதாரண அறிவுகூட இதை உணர்த்தக்கூடும். தவிர, பொதுமக்களின் பணம், இரும்புக் கம்பிகள், தாழ்ப்பாள், துப்பாக்கிகள், காவலாளிகள், வேலி அடைப்பு கைதிக்கான தனி உடை இவ்வளவும் சிறை அதிகாரிகளுக்குத் துணையாகவும், ஒரு திக்கற்ற நிர்க்கதியான மனிதனுக்கு எதிராகவும் இருந்ததை உணர வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

## மூன்று நாட்கள் வீணாகும்

ஷாவின் அன்பர் ஒருவர், தான் அளிக்கும் சிறந்த விருந்துக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

அதற்கு ஷா.

" நான் ஞாயிற்றுக் கிழமையிலும் ஓய்வின்றி வேலை செய்பவன். என் வாழ்க்கையில் மீதமுள்ள நாட்களில் நான்

செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து முடிக்க வேண்டுமே என கவலைப்படுகிறேன். செல்வ மங்கையர் சிலரைக் கண்டு அளவளாவுவதற்காக நான் அங்கு வருவதால் மூன்று நாட்களை வீணடிக்க என்னால் இயலாது" என்று எழுதி அனுப்பினார்.

## திருட்டால் ஏற்பட்ட பலன்

ஷாவின் வீட்டுக்கு வந்திருந்த விருந்தினரின் கோட்டு திருட்டுப் போயிற்று. அவர், திருட்டுக்காக இன்ஷ்யூர் செய்திருந்ததால், அந்த நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டது. ஷாவையும் மீறி போலீசுக்குச் செய்தி எட்டியது. ஆனால், திருடன் அகப்படவில்லை. அதற்குப் பதிலாக ஷாவுக்கோ அதிகச் செலவு உண்டாயிற்று. வாசல் கதவுகள் உறுதியாக்கப்பட்டன. அதைப்பற்றி ஷா,

"எனக்குச் செலவு ஏற்பட்டது. அதனால் சிலருக்குச் சில நாட்கள் வேலை கிடைத்ததைப்பற்றி திருடன் மகிழ்ச்சி அடையலாம். உறுதியான புதிய கதவுகளால் என்னுடைய மாடிப்பகுதி தனிப்பட்ட பைத்தியக்காரர் வீடுபோல் காட்சி அளித்தது" என்று குறிப்பிடுகிறார்.

## கட்சிப் பத்திரிகை

"ஒரு கட்சிப் பத்திரிகையை மட்டும் படிப்பவன் உண்மை எதையும் உணர முடியாது, தன் கட்சிப் பத்திரிகையைக் காசு

கொடுத்து வாங்கும்போதே முற்ற கட்சிப் பத்திரிகை ஒன்றையும் வாங்கிப் படிப்பதே கடமை. அப்போதுதான் கண்மூடிப் பின்பற்றும் அறியாமை நீங்கும்"

## எழுத்தாளன் யார்?

"எவன் தன்னைப் பற்றியும் தான் வாழும் காலத்தைப் பற்றியும் எழுதுகின்றானோ அவனே எல்லா மக்களைப் பற்றியும் எல்லாக் காலத்தைப் பற்றியும் எழுதும் எழுத்தாளன் ஆவான்."

## உழைப்பே இனிமை

"சமுதாயத்துக்கு என் வாழ்க்கை உரிமையுடையது. ஆகவே, சமுதாயத்துக்கு இயன்ற அளவு உழைப்பதே என் கடமை.

உயிர் இருக்கும் வரையிலும் உழைத்துச் சாக விரும்புகிறேன். உழைக்க உழைக்கத்தான் எனக்கு வாழ்க்கை இனிக்கிறது".

## விலை மதிப்புள்ள உயிர்

அறிவற்ற குண்டுவீச்சுக்கு எதிரே நின்று மனிதன் தன் உயிரைப் பலியாக்குவது அறியாமை என்பது ஷாவின் கருத்து.

என்னிடம் அஞ்சாமை இருக்கிறது நெறியான முறையில் எந்த அளவுக்கும் அஞ்சாமல் போராட என்னால் இயலும். ஆனால், ஒருவரை ஒருவர் சுடுவதற்கும், தாக்குவதற்கும் முனைந்தபோது, நான் கோழையாக விலகி, என் படுக்கை அறையில் ஒதுங்கி இருப்பேன். சுட்டுப் பொசுக்கக்கூடிய அளவுக்கு என் உயிர் விலைமதிப்பற்றது அல்ல"

## கற்றுக்கொண்டது என்ன?

"நான் படித்தப் பள்ளிக் கூடத்தில், என்னைப்பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளக்கூடிய ஆசிரியர்கள் இல்லை. ஆகவே, பள்ளிக்கூடத்தில் நான் ஒன்றுமே கற்றுக் கொள்ள இயலவில்லை"

## நானே ஆசிரியர்; நானே மாணவன்!

"எழுத்துத் தொழிலை, எனக்கு நானே ஆசிரியனாக இருந்து பயிற்றுவித்து வந்ததால், ஆராய்ச்சிமிக்க ஆசிரியரிடம் பயிலத் தொடங்கி, தன்னம்பிக்கையும், மனநிறைவும் இல்லாமல் வருந்தும் மாணவனைப்போல், அவதிப்பட்டேன். அத்தகைய ஆசிரியராகிய எனக்கு, எழுத்தாளனாகிய நானே மாணவன். ஆசிரியரை ஏய்க்கவும் முடியவில்லை; மகிழ்விக்கவும் முடியவில்லை."

## இரண்டும் கெட்டான் நிலை

சீரான உடை இல்லாமலும், தபால் செலவுக்கு என்ன செய்வது என்ற நிலையில் இருந்த ஷா சோர்வு அடைந்து விடவில்லை. அதைப்பற்றி,

"புகழுக்கும், இகழ்ச்சிக்கும், கவலைப்படாத ஒருவித உணர்ச்சியற்ற தன்மையை அதனால் பெற்றேன். அந்தத் தன்மை, அந்த நாள் முதல் எனக்குப் பயன் உள்ளதாக இருந்து வருகிறது. அதனால் புத்தக வெளியீட்டிலும் நாடக முறையிலும் அக்கறை குறைந்தவனாக இருந்து வந்தேன். அது வளர்ந்து சில சமயங்களில் எனக்கு இடையூறாகவும் இருந்தது. தொடர்ந்து எழுத்து வேலைகளைச் செய்வதற்கும் இயலாது என்று உணரும்படியும் செய்தது. அதனால், பிற்காலத்தில் எனக்குக் கிடைத்த வாய்ப்புகளைப் பயன் படுத்திக் கொள்ளாமல், நெகிழவிடுவதும் ஒத்தி வைப்பதுமாகத் தவறும் செய்திருக்கிறேன்.

## முரண்பாடு கண்டார்

அதிகமாகவும், நன்றாகவும் எழுத எழுத, மறுப்பும் எதிர்ப்புமே மிகுந்து வந்தன. அதற்கான காரணத்தை இறுதியில் கண்டுபிடித்தேன். என் நூல்களில், இலக்கியக்

குறை எதையும் புத்தக நிறுவனத்தினர் சுட்டிக் காட்டவில்லை. ஆனால், மதிப்புப் பெற்றுவந்த கொள்கைகளுக்கும், சமுதாய வாழ்வுக்கும் முரண் பாடானவற்றை நான் எழுதி வந்ததே காரணம் என்பதை உணர்ந்து கொண்டேன். ஆயினும், உடனே என் எழுத்தை நிறுத்தவில்லை. ஐந்தாவது நாவல் எழுதிக்கொண்டிருந்த போது, பத்திரிகை உலகில் எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போதுதான் என் முயற்சியை நிறுத்தினேன்."

## சமுதாயத்துக்குப் புறம்பானவன்

"நான் சமுதாயத்துக்குப் புறம்பாக, அரசியலுக்கு எதிராக, விளையாட்டு அமைப்புகளுக்கு விரோதமாக, கோயிலுக்குப் புறம்பாக வெளியே வாழ்ந்து வந்தேன். பொது வாழ்க்கைக்கு முற்றிலும் வெளியே நின்று விட்டேன். ஆனால் இசை, இலக்கியம், ஓவியம், விஞ்ஞானம் ஆகிய துறைகளிலோ நேர்மாறாக இருந்தேன். நான் ஒருவன்தான் இவற்றுக்கு இயைந்து, இவற்றினுள் வாழ்ந்தேன்".

## சுயமதிப்போடு வாழ்ந்தவன்

"வறுமையில் ஒழுங்கின்றி வளர்ந்த காரணத்தால், வறுமை ஒரு தொல்லை என்றும், துன்பம் என்றும் உணர்ந்தபோதிலும், பாவம் என்றும், இழிவு என்றும் நான்

கருதியது இல்லை. என் திறமை கலை அறிவு, இடைவிடாத உழைப்பு முதலானவற்றை நினைத்து, சுயமதிப்போடு மகிழ்ந்து வந்தேன்".

## அவர் அடைந்த மகிழ்ச்சி

எச். ஜி. வெல்ஸின் மனைவி இறந்தபோது, அவருடைய துயரத்தை மாற்றுவதற்காக ஷா அவரை, எரியூட்டும் அறைக்குள் சென்று பார்க்குமாறு கூறினார். "குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு செல்லுங்கள். அவர்களும் பார்க்கவேண்டும்; அது அழகான இடம். என் தாய், இங்கே எரிக்கப்பட்டதை நான் கண்டேன். போய்ப் பார்த்த பிறகு மகிழ்ச்சியாயிருக்கும்" என்று சொல்லி அனுப்பினார் ஷா".

அதேபோல், போய் பார்த்துவந்த வெல்ஸ், "உண்மையாகவே அது அழகாகத்தான் இருந்தது" என்றார். அதைக்கேட்டு ஷா மகிழ்ந்தார்.

## அவருடைய நம்பிக்கை

என் வயதில், என்னால் செய்ய முடிந்த அளவு செய்து கொண்டிருக்கிறேன். என் ஆற்றலும் குறைந்து வருகிறது. நான் சீர்த்திருத்தத் துறையில் அளவு கடந்து செல்வதைக்

கண்டவர்கள் என் ஆற்றல் குறைவதைக் கண்டு மகிழ்ச்சியும் கொள்ளலாம். ஆனால், நான் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பது வேறு. இனி வரும் இளைஞர்கள், இன்னும் பொருத்தமானவற்றையும், சிறப்பானவற்றையும் எழுதி விரைவில் என் நூல்களைப் பின்னுக்குத் தள்ளுவார்கள் என்று நம்புகிறேன்."

## அவர் நிலையும் அதுவே!

வறுமை நிலையிலும் கவலையற்ற தன்மை ஷாவுக்கு இயல்பாயிருந்தது. வறுமைக் காலத்தில், ஏழை ஒருவன் ஷாவின் உடையைக் கண்டு ஏமாந்து அவரை நெருங்கி "உண்மையாய்ச் சொல்லுகிறேன். என்னிடம் ஒரு காசும் இல்லை" என்று கூறி பிச்சைக் கேட்டான். அதைக் கேட்டதும்,

"நானும் அதே நிலையில்தான் இருக்கிறேன்" என்றார் ஷா.

## இரண்டு எண்ணங்கள்

நண்பர் ஒருவரோடு போய் கடலில் குளித்துக் கொண்டிருந்தார் ஷா. எதிர்பாராமல் அலைகள், அவருடைய கால்களை இழுத்துச் சென்றன. களைப்படையும்வரை நீந்திப் பார்த்தார். இனிப் பயன் இல்லை என்று நம்பிக்கை இழந்தபோது; அவருடைய காலில் பாறை ஒன்றுபட்டது.

அதைப்பற்றிக்கொண்டு நின்ற போது, நீர் முழங்கால் அளவில் இருந்தது.

"அலைகளின் வேகத்தை எதிர்த்து நீந்திப் பயன் இல்லை என்பது எனக்குத் தெரியும். அதனால் ஏற்படக்கூடிய முடிவை எண்ணிக் கொண்டேன். இனி, கரையேறி உயிர் பிழைக்க வழி இல்லை என்று அறிந்ததும் இரண்டு எண்ணங்கள் தோன்றின. ஒன்று: என்னுடைய உயிலில் என் நூல்களின் மொழிபெயர்ப்பாளர்களோடு செய்யவேண்டிய உடன்படிக்கைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லையே என்று எண்ணினேன்; மற்றொன்று: உணவு நேரத்துக்கு நான் ஏன் வரவில்லை என்று என் மனைவி திகைப்படைவாள் என்று எண்ணினேன்."

## ஆயுள் போதாது

"மனிதனுக்கு இப்போது உள்ள ஆயுள் போதாது. மனிதன் சாகும்போது, குழந்தையைப்போல் முழுமையான அறிவு பெறாத நிலையில் இருந்தே சாகிறான். அதனால் அரசியல் முதலியவற்றில் போதிய முன்னேற்றம் அடையாமல் துன்புறுகிறான்".

## இளைஞர்களுக்கு அறிவுரை

வறுமையில் துன்புறும் இளைஞர் எவரேனும், தம்முடைய வாழ்க்கையை உதாரணமாகக் கொண்டால் கேடு உண்டாகுமே எனப் பயந்து அறிவுரை ஒன்றைக் கூறினார் ஷா.

"சமுதாய ஏணியின் அடியில்—கீழ்ப்படியில் நான் இருந்தேன். ஆனால், அந்த ஏணியின் மேல் ஏறிச்செல்ல வில்லை. அது தானாகவே என்னை இழுத்து, மேல்நிலையில் வைத்திருக்கிறது. ஆகையால், ஏழை இளைஞர்கள் என் வாழ்க்கையை உதாரணமாகக் கருதி, ஏமாற்றத்துக்கு ஆளாகக்கூடாது என எச்சரிக்கின்றேன். தாழ்ந்த நிலைமை, முன்னேற்றித்தின் முதல்படி என்று தவறாக எண்ணிக் கெட்டுப்போய்விடக் கூடாது".

## வேறு போக்கிடம் இல்லை

(அந்தக் காலத்தில், கலைத்துறையில், முன்னேற்றத்தை விரும்பிய அயர்லாந்துக்காரர் ஒவ்வொருவரும், அயர்லாந்தைவிட்டு வெளியேறுவதையே முதல் கடமையாகக் கொண்டிருந்தனர்.

ஷா லண்டனுக்குப் போய்ச் சேர்ந்ததும் அத்தகைய முயற்சியே ஆகும். ஆனால், லண்டனை மட்டுமே தான் தேர்ந்து எடுக்க வேண்டிய சிறப்பு என்ன?) அவர் கூறுகிறார்:

"விஞ்ஞானமோ இசையோ என் கலையாக இருந்தால் பெர்லினுக்கோ, லிப்சிகோ போயிருப்பேன். ஓவியமாக இருந்தால், பாரிசுக்கு சென்றிருப்பேன். சமயக் கலையாக இருந்தால், ரோம் நகருக்குப் போயிருப்பேன். என் கலைப்பொருள் ஆங்கில மொழியாக இருந்தது. அதனால் லண்டன் நகரம் தவிர வேறு போக்கிடம் எனக்கு இல்லை."

# பொறுப்பை ஏற்பவர்

"பிரிட்டனில், 'பேபியன் சங்கம்' என்பது பிரசித்தமானது; அரசியல் பிரமுகர்களான அட்லி, கிரிப்ஸ் முதலானோர் அரசியல் துறையில் பயிற்சி பெற்று முன்னேறுவதற்குக் காரணமானது அந்தச் சங்கமே.

அன்னிபெசன்ட் அம்மையாரும், ஷாவும் அந்தச் சங்கத்தில் உறுப்பினர்களே.

அந்தச் சங்கத்தை ஆர்வத்தோடு வளர்த்தவர்களில் ஷாவும் ஒருவர். அக்காலத்தில், அதை எப்படி வளர்த்தார் என்பதற்கு அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளும் எழுதிய கடிதங்களுமே போதுமான சான்றுகள் ஆகும்.

பத்திரிகைகளும், நாடக அரங்குகளும், சொற்பொழிவு மேடைகளும் அஞ்சும்படி வாழ்ந்துவந்த ஷா, பலருடைய வெறுப்புக்கும் பழிச்சொற்களுக்கும் ஆளான போதிலும் பல குழுக்களின் மத்தியில் அவர் ஒற்றுமைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் மிகவும் பாடுபட்டிருக்கிறார்.

பேபியன் சங்கம் இருப்தேழு ஆண்டுகள் பிளவு படாமல் சேவை செய்ததற்கு முக்கிய காரணம் ஒற்றுமையே நோக்கமாகக் கொண்டு ஷா செய்த சிறப்பான முயற்சிகளே ஆகும்.

செயற்குழுவில் பிளவுகளோ, சச்சரவுகளோ ஏற்படக் குறை ஏதாவது தோன்றினால், அந்தக் குறைக்குத் தாமே காரணம் என்று கூறி முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு நிலைமையை எப்படியாவது சீர்படுத்தி விடுவார்.

அவர் ஈடுபட்ட துறைகளில் எல்லாம் அவருடைய உழைப்பையும், திருத்தமுறச் செய்யும் சிறப்பையும் உணர்ந்த பலரும் போற்றினார்கள்.

## வியாபாரம்போல் கருதவேண்டும்

ஷாவுக்கு நெருங்கிய பழக்கமுள்ள நடிகர் ஒருவர் இருந்தார். அவர் காலில் கடுமையாக அடிபட்டு மிகவும் வேதனையுற்றார். ஒரு காலைவெட்டி எடுக்கப்படும் நிலையில் அவர் இருந்தார்.

அப்பொழுது ஷா அவருக்கு ஆறுதலாக கடிதம் எழுதினார்.

"எனக்கு இரண்டு கால்கள் இருப்பதை எண்ணி மூன்று கால்கள் இல்லையே என்று நான் எப்பொழுதும் ஏங்கியது இல்லை. ஆகவே, நீங்கள் ஒரு கால் உள்ள நிலையில் இரண்டு கால் இல்லையே என்று ஏங்கித் துன்புற வேண்டியது இல்லையே" என்று குறிப்பிட்டார்.

"ஒரு காலை வெட்டி எடுத்துவிட வேண்டும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறிய ஆலோசனையின்படி நடக்கலாமா?" என்று ஷாவிடம் கேட்டிருந்தார் அந்த நடிகர்.

"எவ்வளவு ஓய்வு ஊதியம் கிடைக்கும் என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். கால் முழுவதும் எடுத்தால் எவ்வளவு கிடைக்கும்? ஒரு பகுதியை மட்டும் எடுத்தால் எவ்வளவு கிடைக்கும்? இவற்றை எல்லாம் வியாபாரம் போல் கருதி, ஆராய்ந்து பார்த்து, தீர்மானிக்க வேண்டும்" என்று பதில் எழுதினார் ஷா.

## நடிகர்கள் ஏமாற்றுவதில்லை

எல்லோரிடத்திலும் குறையைக் கண்டு, குறும்பு செய்து எள்ளி நகையாடும் ஷா, நடிகர்களிடம் மட்டும் தனிப்பட்ட அன்பு செலுத்தி வந்தார்.

ஒரு நடிகருக்கு எழுதிய கடிதத்தில்:

"மற்றவர்களுடைய வாழ்க்கைத் தொழில்களைக் காட்டிலும் கலைத்துறையில் பித்தலாட்டமும் ஏமாற்றமும் குறைவு என்பது என்னுடைய தீர்மானமான கருத்து. பெரிய நீதிபதிகள், அரசியல் தலைவர்கள், மருத்துவ நிபுணர்கள், சமயத் தலைவர்கள் இவர்களின் வாழ்க்கையை விட, நடிகராகிய உங்கள் வாழ்க்கையே தனிச் சிறப்புடையது, விரும்பியதக்கதாகவும் இருக்கிறது. ஏன் என்றால், உங்கள் வாழ்க்கையில் பித்தலாட்டம் எதுவும் இல்லை. நீங்கள் ஹாம்லெட்டாக நாடக மேடையில் தோன்றும்போது, ஹாம்லெட்டாக நடிப்பதாகவே காட்டிக்கொள்கிறீர்கள். ஆனால் நீதிபதி தாம் உண்மையாகவே நீதிக்கு இருப்பிடம்

என்றும், மருத்துவ நிபுணர் உயிர் வாழ்க்கையைப்பற்றி தான் முற்றிலும் அறிந்தவர் என்றும், சமயத் தலைவர், சுவர்க்கத்துக்கும் நரகத்திற்கும் உரிய சாவிக்கொத்து தம் கையில் இருக்கிறது என்றும் சொல்லிக்கொண்டு அவர்கள் நடிக்கிறார்கள். ஆனால் கலைஞராகிய நீங்களோ, நடிகராயினும் ஓவியக் கலைஞராயினும் சரி, அப்படிச் சொல்லி ஏமாற்றி வேறொன்றாக நடிப்பதில்லை" என்று குறிப்பிட்டார்.

## ஐம்பது ஆண்டுகள்

ரஷ்யாவிலுள்ள பொதுவுடைமைப் போக்குக்கும், தம்முடைய பொதுவுடைமைக் கொள்கைக்கும் உள்ள வேறுபாட்டைக் குறிப்பிட்டு, "ரஷ்யாவின் பொதுவுடைமை ஐம்பது ஆண்டுகளுக்கு பிற்பட்ட நிலையிலே உள்ளது. நான் அதைவிட ஐம்பது ஆண்டுகள் முற்போக்கு அடைந்துள்ளேன்." என்று ஒரு முறை கூறினார் ஷா.

## சிறப்புக்குக் காரணம்

ஷேக்ஸ்பியரைவிட தாம் சிறந்தவர் என்பதை ஷா குறிப்பிடுகிறார்:

"ஷேக்ஸ்பியர் காலத்தில் பிறந்திருந்து, அவரைப் போல நானும் செய்யுள் வடிவில் நாடகங்கள் எழுதியிருப்பேனானால், அவரை நான் சுலபமாக வென்று ஏழையாக்கி இருப்பேன்."

## மாணவனுக்குத் தண்டனை

ஷா எழுதியுள்ள நாடகம் ஒன்றில், ஒருவன் தன்னைப்பற்றி ஓர் இடத்தில் "நான் பெர்னார்ட்ஷாவின் மாணவன்" எனச் சொல்லிக்கொள்கிறான்.

இப்படியாக தம்முடைய நாடகத்தில், தம்மைப் புகழ்ந்து கொள்ளலாமா? என்று ஷாவிடம் ஒருவர் கேட்டார்.

" நான் வேண்டும் என்றேதான் அவ்வாறு எழுதினேன். கிரிமினல் நீதிமன்றம் ஒன்றில், இளைஞன் ஒருவனுடைய வழக்கு நடந்தபோது, அவன் தன்னைப்பற்றி இவ்வாறு சொல்லிக்கொண்டு ஆறுமாதம் தண்டிக்கப் பட்டான்" என்று காரணம் காட்டினார் ஷா.

## பேசுவது வேறு

ஒரு கூட்டத்தில், 'சவுக்கடி தண்டனை' பற்றி ஷா பேசிக்கொண்டிருக்கையில்,

"நீங்கள் சவுக்கடியைக கண்டிருக்கிறீர்களே, இராணுவத்தில் தவறு செய்கிறவர்கள், அதை விரும்பிக் கேட்கிறார்களே, அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கூட்டத்திலிருந்து ஒருவர் கேட்டார்.

"நான் பேசுவதற்கு எடுத்துக்கொண்ட பொருள் சவுக்கடி தண்டனையைப் பற்றியதே அன்றி, சவுக்கடி கேட்கப்படுவதைப் பற்றி அல்ல" என்று பதில் கூறினார் ஷா.

## இரண்டுக்கும் வேறுபாடு

பொது மருத்துவ நிலையங்களுக்கும், தனிப்பட்ட மருத்துவ இல்லங்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன என்பதை ஷா கூறுகிறார்:

"பொது மருத்துவ நிலையங்களில், நோயாளியின் நோய் பாதி குணமாகும் முன்பே அவனை நடுத்தெருவுக்குத் துரத்திவிடுகிறார்கள். ஆனால், தனியார் மருத்துவ இல்லங்களில், சாகும் வரையில், அவனை வெளியே அனுப்புவது இல்லை. இதுவே வேறுபாடு."

## உறுதியான தயாரிப்பு

தம்முடைய நாடகங்களை எல்லாம் ஒருங்கிணைத்து அச்சிட்ட தொகுதிக்கு முகவுரை எழுதினார் ஷா.

"இவை என் வாழ்நாள் உழைப்பு ஆகையால், இவற்றை ஒருமுறை படித்து, உணர்ந்துவிட முடியும் என்று எண்ணாதீர்கள். என் நூல்கள் அனைத்தையும் ஆண்டுக்கு இரு முறையாக ஏறக்குறைய பத்து ஆண்டுகள் படித்துப் பயில வேண்டும். அந்த நோக்கத்தோடுதான் இந்தப் பதிப்பு உங்களுக்காக இவ்வளவு உறுதியாகப் பைண்டு செய்யப்பட்டு வெளிவருகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## சிரமம் எதற்கு?

ஷா நோயுற்றிருக்கும்போது, பத்திரிகை நிருபர்கள் அவரை அணுகி, "உங்களுக்கு என்ன நோய் என்பதை பொதுமக்கள் அறிய விரும்புகின்றனர்" என்று கேட்டனர்.

"ஏன் இவ்வளவு சிரமம்? ஷா இறந்துவிட்டதாகச் சொல்லிவிடுங்கள். அதனால் எனக்கு எவ்வளவோ தொல்லைகள் குறையும்" என்றார் ஷா.

## மூளை மங்கியது ஏன்?

"சிறுவர்களை நன்றாக அடித்தால் தான் சொற்களையும் தொடர்களையும் மனப்பாடம் செய்வார்கள்" என்று புகழ்பெற்ற அறிஞர் டாக்டர் ஜான்சன் ஒரு சமயம் கூறினார்.

அவர் கூறியதை மறுத்து, "ஜான்சனின் ஆசிரியர் அவரைக் கொடுமையாக நடத்தியிருப்பார். அதனால்தான் அவருடைய சிறந்த மூளை ஒருவாறு திரிந்தது. அவரைப் போல் நான் ஆசிரியரிடம் அடிவாங்கவில்லை. என் ஆசிரியர்கள் வாங்க வேண்டிய சம்பளத்தை வாங்கிக் கொண்டு கவலை இல்லாமல் இருந்தார்கள். அதனால் நான் பள்ளிக்கூடத்தில் ஒன்றும் கற்றுக்கொள்ளவில்லை. அந்தக் கல்வியைப் பெறாமல் நான் தப்பித்துக்கொண்டதால்

ஜான்சனைப் போல், நான் மதுக்கடைகளில், இலக்கியம் கற்ற அறிவற்றவர்களோடு வெட்டிப் பேச்சுப் பேசி, காலத்தை வீணாக்காமல் வாழ்ந்தேன். அந்தக் கல்வியால்தான், தம் திறமையைக் காட்டி, இங்கிலாந்தை ஆட்டி வைத்திருக்க வேண்டிய ஜான்சன் தம் காலத்தை வீண்பேச்சில் கழித்தார்" என்று கூறினார் ஷா.

## இன்னும் மறக்கவில்லை

ஷா ஒரு முறை கொழும்புக்கு போயிருந்தார். அங்கே அறிஞர் ஒருவர் ஆங்கில இலக்கியத்தைப் பற்றி ஷாவிடம் வானளாவப் புகழ்ந்து பேசினார்.

எல்லாவற்றையும் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த ஷா, "இருபது வயதில் நான் படித்து மறந்து போனதை, நீங்கள் இன்னும் மறக்கவில்லையே" என்றார்.

## துணிவு ஏன் ஏற்படுகிறது?

இளமைப் பருவத்தில், தன் சகோதரிகள் இருவருடன் ஞாயிற்றுக்கிழமை தோறும் மாதா கோயிலுக்குப் போய் வந்தார் ஷா.

"இளமையும் சுறுசுறுப்பும் அடைய நாடி நரம்புகளையும் தசை நார்களையும் கொண்ட பிள்ளைகள் அழகான உடை

அணிந்துகொண்டு அசையாமலும், வாய் திறவாமலும், கோயில் கட்டடத்துக்குள் அமைதியாக அடைபட்டுக் கிடப்பது பெரிய கெடுதலாகும். அந்தக் கட்டடத்துக்கு வெளியே உலாவி, கை, கால்களுக்குப் பயிற்சி தருவது மகிழ்ச்சிகரமானதாக இருக்கும்போது, உள்ளே நீண்ட நேரம் அடங்கிக் கிடப்பது பொறுக்க முடியாததாகும். உணர்ச்சியுள்ள இளைஞர்கள் அதனால் தங்களுக்கு உரிமை உண்டாகி, வளர்ந்து பெரியவர்களான போது கோயிலுக்குப் போகாமல் நின்றுவிடத் துணிவு ஏற்பட்டு விடுகிறது" என்று குறிப்பிடுகிறார் ஷா.

## சொந்த நாட்டின் பாராட்டு

ஷா அயர்லாந்து நாட்டில் பிறந்தவர்.. ஆயினும் அந்த நாட்டு மக்கள் அவரை வெகுகாலம் வரை பாராட்டி மதிக்கவில்லை. காரணம் பொறாமையும், நெடுங்காலம் அடிமை வாழ்வில் உழன்ற உணர்ச்சியுமே ஆகும்.

ஷாவின் முதுமைக் காலத்தில், டப்ளின் நகராட்சி மன்றம் அவரைக் கௌரவித்துப் பாராட்ட முன்வந்தது.

"என் சொந்த நகரத்தின் பாராட்டுதலுக்கு நன்றி செலுத்துகிறேன். இதுவரை வெளிநாட்டாரின் பாராட்டுதல்கள் என்னை அணுகியபோதெல்லாம் நான் ஒளிந்து தப்பித்து வந்தேன். எப்பொழுதும் கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தாலும் டப்ளின் நகரத்தை நான்

மதித்து வந்தேன் என்பதை அந்த நகரம்தான் கூற உரிமை உண்டு. நேரில் வந்து கௌரவத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் நான் இல்லை. என்னுடைய முதுமை அதற்கு இடம் தரவில்லை" என்று எழுதினார்.

அதன்பின், டப்ளின் நகராட்சிக் குழு ஒன்று லண்டனுக்கு வந்து ஷாவைப் பாராட்டி கௌரவத்தை அளித்தது.

## தனித்து வாழ்வதா?

லண்டனில் உள்ள அயர்லாந்துக்காரர்கள், "ஐரிஷ் கிளப்" என ஒரு கழகத்தை நிறுவினார்கள். அதற்கு வாழ்த்துக் கூறுமாறு ஷாவுக்கு அழைப்பு அனுப்பினார்கள்.

"ஐரிஷ் கிளப்" என்ற அமைப்பு எனக்கு மிகவும் இழிவானதாகத் தோன்றுகிறது. இங்கிலாந்தில் உள்ள நீங்கள் ஆங்கிலேயர்களுடைய கழகங்களில் கலந்து கொள்ள வேண்டும். இங்கே வந்த பிறகும்கூட, நீங்கள் இப்படி தனிக் குழுவாக வாழ்வதனால், அயர்லாந்தைவிட்டு வெளியேறாமல் அங்கேயே இருந்திருக்கலாமே. ஆங்கிலேயருடைய கழகங்களில் உங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. ஆங்கிலேயர் ஒருவேளை உங்களைக் காட்டிலும் முட்டாள்களாக இருக்கலாம். ஆனால், நீங்களும் அவர்களும் ஒருவருக்கு ஒருவர் அந்நியர் ஆகையால், கலந்து பழகிக் கற்றுக்கொள்ளக் கூடியவை ஏராளமாக உள்ளன என்று

பதில் எழுதினார் ஷா. (இந்தியாவில் பல மாநிலத்தவர்கள், மாவட்டத்தினர் சங்கம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? – ஆசிரியன்).

## உழைப்பில் வல்லவர்

"குடிப்பதில் என் தந்தை எவ்வளவு வல்லவரோ, அவ்வளவுக்கு உழைப்பதில் நான் வல்லவன்" என்று ஷா தம்மைப் பற்றிக் குறிப்பிடுவார்.

## மாணவர்களின் வெறுப்பு

கல்வித் துறையினர் ஒரு சமயம், ஷாவின் 'செயின்ட் ஜோன்' என்ற நூலின் ஒரு பகுதியை பள்ளிக்கூடப் பாடப் புத்தகத்தில் சேர்த்துக்கொள்வதற்கு ஷாவிடம் அனுமதி கேட்டனர்."

"இப்பொழுதோ, இனிமேலோ பள்ளிக்கூடப் பாடப் புத்தகத்தில் என் நூல்களை இணைக்கும் முயற்சியை நான் வெறுக்கிறேன். அப்படிச் செய்ய முயன்றதால், மாணவர்கள் ஷேக்ஸ்பியரை வெறுப்பதுபோல், என்னையும் வெறுப்புக்கு ஆளாக்காமல் இருப்பார்களாக" என்று கூறி அனுமதி தர மறுத்து விட்டார் ஷா.

## எங்கேயும் போகவில்லை

ஷாவின் தாயும் தந்தையும் அக்கம்பக்கத்தாருடன் சுமுகமாகப் பழகமாட்டார்கள்; உறவினர் வீடுகளுக்குச் சென்று அளவளாவுவதும் இல்லை.

"என்னுடைய இளமைக் காலத்தில், என்னுடைய பெற்றோருடன் எந்த உறவினர் வீட்டுக்கும் போய் வந்ததாக எனக்கு நினைவே இல்லை" என்று குறிப்பிடுகிறார் ஷா.

## அதுவே அவர்களை நடத்தியது

ஷாவின் தந்தை, தமக்குக் கிடைத்த ஓய்வு ஊதியத்தைக் கொண்டு, பெரிய வியாபாரமும் மாவுமில் ஒன்றும் ஒருவருடன் கூட்டாகச் செய்தார். பொறுப்போடு அவர் கவனிக்காமல் மற்றவர்களிடம் விட்டதால் தொழில் சிறப்படையவில்லை. அதைப்பற்றி, "அவர்கள் அந்தத் தொழிலை நடத்தவில்லை; அந்தத் தொழிலே அவர்களை நடத்தி வந்தது" என்று ஷா குறிப்பிடுகிறார்.

## ஆத்திரத்தால் உண்டான நஷ்டம்

சர். எப், ஸி. கௌல்டு என்பவருக்கும், பெர்னார்ட் ஷாவுக்கும் பரோ கவுன்ஸில் தேர்தலின்போது கடிதப் போக்குவரத்து நடைபெற்றது.

அந்தச் சமயம் ஷா காரசாரமாகவும், நீளமாகவும் கௌல்டுக்கு கடிதங்கள் எழுதினார்.

ஒவ்வொரு கடிதமும் ஷாவின் புத்தக முன்னுரைகளைப் போல நீண்டிருக்கும்.

ஒரு கடிதத்தில், தாம் பேசும் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கும்படி கௌல்டை வேண்டினார் ஷா.

கௌல்டு அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. எனினும் இருவருக்கும் கடிதப் போக்குவரத்து தொடர்ந்து நடந்து கடைசியில் கௌல்டு தலைமை வகிக்க ஒப்புக்கொண்டார்.

“தங்களுடைய அபிப்ராயங்களை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, என்னுடைய கூட்டத்தில் எப்படி பேசப்போகிறீர்கள்?” என்று ஷா குத்தலாக கௌல்டுக்கு கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதம் கௌல்டுக்கு மிகவும் ஆத்திரமூட்டியது. அதன் காரணமாக ஷாவின் கடிதங்கள் யாவும் கிழிக்கப்பட்டுக் குப்பைக் கூடையில் போய் விழுந்தன.

‘என் தந்தை மட்டும் அந்தக் கடிதங்களைக் கிழித்துப் போடாமல் இருந்திருந்தால், நான் வாடகை வீட்டில் இப்பொழுது குடியிருக்க வேண்டிய அவசியம் இருக்காது! அதன் பெயர் “ஸெயின்ட பெர்னார்ட்” என்று மாறியிருக்கக்கூடும் அல்லவா? என்று கௌல்டு மகன் கூறுகிறார்.

(ஸால்ட் என்பவர், ஷா தமக்கு எழுதியக் கடிதங்களை அமெரிக்கப் பிரசுரகர்த்தருக்கு விற்று, அந்தத் தொகையில் ஒரு வீடு வாங்கி, 'ஷா இல்லம்' என்று பெயர் சூட்டினார். அதை நினைவு கூர்கிறார்)

## கடவுளிடம் தகராறு

"பெர்னார்ட் ஷா செய்த சேவைகளில் மிக உயர்ந்தது எது?" என்று எனக்கும் என் மனைவிக்கும் எப்பொழுதுமே கருத்து வேறுபாடு உண்டு.

"அவருடைய சமதர்ம நூல்களும், சொற்பொழிவுகளுமே உயர்ந்தவை" என்று அவள் கூறுவாள்.

"அவர் சிறந்த நாடக மேதை" என்பது என் மதிப்பு.

ஒரு சமயம், ஷாவிடமே, "மனித சமுதாயத்துக்கு நீங்கள் வழங்கியவற்றில் எது மிக உயர்ந்தது? உங்களுடைய சமதர்மப் பிரச்சாரமா? அல்லது நாடகங்களா?" என்று கேட்டாள்.

"என் பிரசாரத்தை எவன் வேண்டுமானாலும் செய்திருக்கலாம். ஆனால் என் நாடகங்களை வேறு எவனும் எழுதியிருக்க முடியாது. நான்தான் அவற்றை எழுத வேண்டியதிருந்தது. அவையே, நான் என்று சொல்லும்படி என் வாழ்க்கையிலே ஒரு பகுதியாகி விட்டன!" என்றார் ஷா,

என் மனைவி அதோடு விடவில்லை, "அது சரி; நீங்கள் பரமண்டலத்துக்குச் சென்று, கடவுளின் முன் நிற்பதாக

வைத்துக் கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் செயல்களில், அவர் எதற்கு அதிக மதிப்பெண் கொடுப்பார் என்று நினைக்கிறீர்கள்?"

"கடவுள் மாத்திரம் என் செயல்களுக்குத் தேர்வு மதிப்பெண் போட ஆரம்பித்தாரானால், அப்புறம் எனக்கும் அவருக்கும் பெரிய தகராறுதான் வந்துவிடும்" என்றார் ஷா.

(இங்கிலந்தில் ஒரு தம்பதியர் ஷாவிடம் உரையாடிய போது நிகழ்ந்தது)

## ஏக்கமும் அவமானமும்

ஷாவுக்கு தம் பெற்றோரிடத்தில் கொஞ்சம்கூட பாசம் கிடையாது. அவர்களும் இவர்மீது அன்பு காட்டியதில்லை.

தம் தந்தை ஒரு குடிகாரர். போக்கிரி என்பதை அறிந்து ஷா மிகவும் அவமானம் அடைந்திருக்கிறார்.

அதைக் காட்டிலும், அவமானம், இளமையில் ஆரம்பப் படிப்புக்காக, ஒரு இலவச பள்ளிக்கூடத்தில் ஒன்பது மாதங்கள் படிக்க வேண்டியதாயிற்று என்று நினைத்து வெட்கம் அடைந்தாராம்.

இந்த விஷயத்தை மாத்திரம் தம் மனைவியிடம் கூடச் சொல்லாமல் மிகவும் இரகசியமாக வைத்திருந்தாராம் ஷா.

இந்த அவமான உணர்ச்சியானது வாழ்நாள் முழுவதும் அவரிடம் மறையாமல் இருந்து வந்ததாம்.

"என் தாய் என் அன்பைக் கவர ஒருபோதும் முயன்றது இல்லை. நானும் அவருடைய அன்பைப் பெற முயன்றவன் அல்லன். என்னை ஒரு உதவாக்கரையாகவும், பெரிய சுமையாகவும் என் தாய் நினைத்தார்.

நான் குழந்தையாக இருந்தபோது, அன்பு என்பது என்னவென்றே எனக்குத் தெரியாது.

நான் வீட்டை விட்டுப் போன பிறகு, திரும்பி வராமலே இருந்திருந்தால், அவர்களில் யாருமே என்னை இழந்துவிட்ட உணர்ச்சியை அடைந்திருப்பார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை" இவ்வாறு கூறுகிறார் ஷா.

## சமையற்காரி தேவை

பெர்னார்ட்ஷாவிடம் முப்பது ஆண்டுகளாக வேலை பார்த்து வந்த இரண்டு வேலையாட்கள் விலகி, ஓய்வு பெற விரும்பினார்கள். ஆனால் ஷாவுக்கு அவர்களை அனுப்ப மனம் இல்லை.

அடுத்த வீட்டுக்காரரான ஸ்டீபன் வின்ஸ்டைன், அவர்களை அனுப்பிவிட்டு, வேறு ஒரு ஏற்பாட்டைச் செய்து கொள்ளக்கூடாதா?" என்று சொன்னார் ஷாவிடம்.

"சைவ உணவு சமைக்கும் சமையற்காரி கிடைக்க மாட்டாளே!" என்றார் ஷா.

"உங்களுக்குச் சேவை செய்வதை ஆனந்தமாகக் கருதுபவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்' என்றார் ஸ்டீபன்.

"அப்படிப்பட்ட ஆட்களைத்தான் என் வீட்டுக்குள் வரவிடக்கூடாது என்றிருக்கிறேன். நான் விரும்பக் கூடிய ஆள் தன் தகுதியை நன்கு உணர்ந்தவளாக இருக்க வேண்டும்; என்னுடைய கருத்துக்களில் அவளுக்கு எவ்வித அக்கறையும் இருக்கக்கூடாது; என் புத்தகங்களை வாசிக்கக்கூடாது; தியாக புத்தியோடு எனக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் எந்த சமையல்காரியும் வரக்கூடாது. என்னிடத்தில் வாங்கும் சம்பளத்துக்காக வேலை பார்ப்பவளைத்தான் நான் விரும்புகிறேன். எந்த வேலைக்காரியும் தன் சொந்த முதலாளிக்கு லட்சியப் பெண்ணாக இருக்க முடியாது" என்றார் ஷா.

## அறிவும் அழகும்

ஷாவின் ரசிகையான ஒரு பெண்மணி, "உங்கள் சிறப்புமிக்க நூல்களைப் படித்து, என் மனத்தைப் பறிகொடுத்துவிட்டேன். நான் மிகவும் அழகானவள். உங்கள்

அறிவோ மிகவும் சிறப்புமிக்கது. ஆகவே, நாம் இருவரும் திருமணம் செய்து கொண்டால் என்ன? உங்கள் அறிவோடும் என் அழகோடும் குழந்தைகள் நமக்குப் பிறந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்று ஷாவுக்கு எழுதினாள்.

"மிகவும் மகிழ்ச்சி, ஆனால், என் அழகோடும் உங்கள் அறிவோடும் குழந்தைகள் பிறந்தால், உலகத்துக்கு எவ்வளவு பெரிய ஆபத்து சூழும்; ஆகவே, உங்கள் கருத்தை ஏற்க மறுக்கிறேன்" என்று அந்தப் பெண்மணிக்கு ஷா பதில் எழுதினார்.

## பெரிய ஆபத்து எது?

காந்தியடிகள் கொலை செய்யப்பட்டபோது ஷா எழுதியதை யாராலும் மறக்க இயலாது.

"ஏது, உலகில் மிக நல்லவராக இருப்பது எவ்வளவு ஆபத்து என்பதை இக்கொலை எடுத்துக்காட்டுகிறது" என்று குறிப்பிட்டார்.

## இருவர்தானா?

"உலகத்திலே விஞ்ஞான நுட்பத்தை அறிந்தவர்கள் இருவர்தான். நானும் ஐன்ஸ்டீனுமே!" என்று குறிப்பிட்டார் ஷா.

## யாருக்குப் பரிசு?

ஷா வாழ்ந்து வந்த பகுதியிலுள்ள ஒரு கல்விக் கூடத்துக்கு ஒருமுறை வருகை புரிந்தார்.

"தங்கள் வருகையின் ஞாபகார்த்தமாகக் கல்விக் கூடத்துக்கு ஏதாவது பரிசு அளிக்கலாமே"? என்று கேட்டார் தலைமை ஆசிரியர்.

"கல்விக் கூடங்களை எல்லாம் வெடிகுண்டு வைத்துத் தகர்க்க வேண்டும் என்று கூறுபவன் நான். அவ்வாறு உங்கள் பள்ளியைத் தகர்த்தால் , அருகிலுள்ள என் இல்லத்துக்கு ஆபத்து உண்டாகும். ஆகவே, இந்தப் பள்ளியிலுள்ள மாணவர்களில், மிக மோசமான கெட்ட நடத்தை உடைய மாணவனைத் தேர்ந்தெடுங்கள். அவனுக்குப் பரிசு அளிக்கின்றேன்" என்றார் ஷா.

அவர் கூறிய கருத்தை தலைமை ஆசிரியர் ஏற்கவில்லை.

## மதிப்பார்களா?

லண்டன் நகரத்தின் பிரபல அரங்கில் ஷாவின் நாடகம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. ரசிகர்கள் மிக உற்சாகமாக, ஆரவாரத்தோடு ரசித்துக்கொடிருந்தனர்.

ஷாவும் அந்த அரங்கில் அமர்ந்து நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் அருகில் இருந்த ரசிகர் ஒருவர், ஷாவிடம் "மக்கள், ஓகோ என்று புகழும்படி, நாடகம் அவ்வளவு பிராமாதம் அல்ல" என்றார்.

"நீங்கள் கூறுவதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இவ்வளவு பெரிய கூட்டத்தில் நீங்களும் நானும் சொல்வது எடுபடாதே! என்ன செய்வது?" என்றார் ஷா.

## வேறு ஆளைத் தேடிக்கொள்

இருபது வயதுப் பெண் ஒருத்தி, ஷாவுடன் ஐந்து ஆண்டுகளாகக் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

இறுதியில், "என்னால் யாருக்கும் பயன் கிடையாது. நான் படு கிழவன்" என்று ஷா அவளுக்கு எழுதியிருந்தார். அவளோ, மேலும் கடிதங்கள் எழுதிக்கொண்டுதான் இருந்தாள்.

பிறகு ஷா தம்முடைய புகைப்படத்தை அவளுக்கு அனுப்பி, அதன் பின்புறத்தில் "என் வாழ்க்கை முடிந்துவிட்டது; செத்தமாதிரிதான். வாலிப நண்பர்களைத் தேடிக்கொள்" என்று குறிப்பிட்டிருந்தார்.

## நீங்கள் தயங்குவீர்களா?

ஷா நகைச்சுவையாகப் பேசுவதில் அளவுக்கு மீறிய பைத்தியங்கொண்டிருப்பதை ருஷ்ய மேதை லியோ டால்ஸ்டாய் கண்டித்திருந்தார்.

அதற்கு ஷா, "நகைச் சுவையையும், சிரிப்பையும் ஏன் தள்ளிவைக்க வேண்டும்? இந்த உலகம் கடவுளின் ஒரே நகைச்சுவையாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் உலகத்தை மோசமான நகைச்சுவையாக இல்லாமல், நல்ல நகைச்சுவையாக ஆக்குவதற்குப் பாடுபடத் தயங்குவீர்களோ?" என டால்ஸ்டாய்க்கு எழுதியிருந்தார்.

## மேஜரும் மைனரும்

காந்தியடிகளை 'மகாத்மா மேஜர்' என்றும், தம்மை 'மகாத்மா மைனர்' என்றும் ஒருமுறை ஷா சொன்னார்.

## அவர் ஏமாந்தார்

ஷாவின் கையொப்பத்துக்கு மதிப்பும், கிராக்கியும் உண்டு என்பதை பலரும் அறிவார்கள்.

ஷாவின் கையொப்பத்தைப் பெறுவதற்காக ஒருவர், ஏதோ, ஒரு பிரச்சினையைப் பற்றி கடிதம் எழுதினார்.

ஷா அவருக்குப் பதில் எழுதி, இறுதியில் கையொப்பம் இடாமல் (SD) G. Bernard Shah என டைப் அடித்து அனுப்பிவிட்டாராம். ஷா அவருடைய நோக்கத்தைத் தெரிந்துகொண்டாரோ!

## அவர்களுக்குத் தெரியும்

ஷாவின் நெருங்கிய நண்பர் ஒருவர் அடிக்கடி ஷாவின் மாளிகைக்கு வந்து, உரையாடுவது வழக்கம். உரையாடலில் கிண்டலும், கேலியும், நகைச்சுவையும் காணப்படும்.

ஷா மெலிந்து, மிக ஒல்லியாயிருப்பார்.

ஒரு சமயம் ஷாவைப் பார்த்து, "வெளிநாட்டிலிருந்து இங்கே வருபவர்கள், உங்களைப் பார்த்தால், இங்கே பெரிய பஞ்சம் உண்டாகி இருப்பதாக எண்ணிக்கொள்வார்கள்" என்று கிண்டலாகச் சொன்னார் நண்பர்.

உடனே ஷா, "அதே சமயத்தில், அவர்கள் உங்களைப் பார்த்தவுடன் அந்தப் பஞ்சத்துக்கான காரணத்தையும் புரிந்துகொள்வார்கள்" என்றார்

நண்பர் மிகவும் பருமனாக இருப்பார்!

## அறிந்தவர் இருவர்

ஒரு கூட்டத்தில், "கம்யூனிசம் என்றால் என்ன? சோஷலிசம் என்றால் என்ன?" என்று விளக்கிப் பேசிக் கொண்டிருந்தார்.

அவர் பேச்சைக் கூட்டத்தினர் ரசித்ததாகத் தெரியவில்லை.

"இந்த விஷயம் மிகவும் எளிமையானதுதான். ஆனாலும், அரசியல் அறியாமையாலும், பொருளாதாரக் கோட்பாடு புரியாமையாலும் என்னுடைய இந்தப் பேச்சு எவருக்கும் விளங்குவதில்லை. உலகத்திலே, "கம்யூனிசம்", "சோஷலிசம்" என்பதை அறிந்தவர் இருவர்தான். ஒருவர் ஸ்டாலின், மற்றொருவர் நான்!" என்றார் ஷா.

## மிருகத்தன்மையா?

ஷா புலால் உணவு கொள்வதில்லை. மரக்கறி உணவையே பெரிதும் விரும்பி உண்பார். அதைப் பற்றிப் பிரசாரமும் செய்வார்.

"மரக்கறி உணவு எவ்வாறு சிறந்தது" என்று ஒருவர் ஷாவிடம் கேட்டார்.

"அறிஞர்களுக்கும் தத்துவ மேதைகளுக்கும் சைவ உணவே சிறந்தது. சைவ உணவை உண்பவர்களே சோர்வில்லாமல், அதிகமாக உழைக்கக் கூடியவர்கள். மிருகங்களைச் சார்ந்து, அவற்றை நம்பி வாழும் வாழ்க்கை மக்களுக்கு இருக்கக் கூடாது. மிருக உணவை உண்டு, பழகப் பழக அந்தத் தன்மையே மக்களுக்கு அமைந்து விடும்" என்றார் ஷா.

## அவர் சின்னக் குழந்தை

காந்தி அடிகளின் புதல்வர் தேவதாஸ் காந்தி, ஐரோப்பா சுற்றுப் பயணத்தின்போது, பெர்னார்ட் ஷாவைச் சந்தித்து உரையாடினார்.

அப்பொழுது, தேவதாஸ் காந்தியிடம், "காந்தியடிகளின் வயது என்ன? என்று கேட்டார் ஷா.

தேவதாஸ் காந்தி, "காந்தியடிகளுக்கு வயது எழுபத்து ஆறு" என்று கூறினார்.

"அது ஒன்றும் அதிகம் இல்லை. அவர் இன்னும் சின்னக் குழந்தைதான்!" என்றார் ஷா.

ஷாவுக்கு அப்பொழுது காந்தியடிகளைவிட வயது அதிகம்!

## இருவரும் கோமாளிகளே

சர்க்கஸ் காட்சி ஒன்றுக்கு பெர்னார்ட்ஷா வருகை புரிந்தார்.

அந்தக் காட்சியில் கோமாளியாக நடித்தவரை, ஷாவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் சர்க்கஸ் நிர்வாகி.

"பழைய கோமாளி ஒருவனோடு நீர் கைகுலுக்குவதற்கு, உங்களுடைய பெருந்தன்மை காரணம்" என்றார் சர்க்கஸ் கோமாளி.

"பழைய கோமாளி ஒருவர், மற்றொரு பழைய கோமாளியோடு கைகுலுக்கினார்; அவ்வளவுதான்" என்றார் ஷா.

## இயற்கைக்காட்சி ரசனை

ஒரு சமயம் ஷா, ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவர் அருகில் மற்றொருவர் உட்கார்ந்திருந்தார்.

வழியில் காணும் இயற்கைக் காட்சிகளைப் பார்த்து அளவுக்குமீறி வர்ணித்துப் புகழ்ந்து கொண்டிருந்தார் அருகில் இருந்தவர். அடுத்து, எழில்மிக்க ஒரு குன்று காணப்பட்டது. "ஆகா! என்ன இயற்கையின் எழில்! இதை ரசிக்க எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாமே" என்றார் அவர்.

ஷாவுக்கு, அவர் கூறியவை தலைவலியாக இருந்தது; பொறுமை இழந்தார். உடனே விரைவாக எழுந்து அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார் ஷா.

ரயில் உடனே நின்றது. ரசிகரோ ஒன்றும் புரியாமல் விழித்தார்.

"நண்பரே, இதற்கு ஐந்து பவுன்தான் அபராதம் கட்ட வேண்டும்! நீங்கள் அதைக் கொடுத்துவிட்டு, அந்த

இயற்கைக் காட்சியை நன்றாக ரசித்துக் கொண்டிருக்கலாம்" என்று கூறினார் ஷா.

## கொள்ளையர்களும் முதலாளிகளும்

"ஏழைகளைக் கொள்ளை அடித்து முதலாளிகள் வாழ்கிறார்கள். கொள்ளைக்காரர்களோ, பணக் காரர்களைக் கொள்ளையடித்து வாழ்கிறார்கள். இவர்களில் யார் மேல்?"

## யாரிடம் நம்பிக்கை

"இப்பொழுது நாம் வரவர எல்லாவற்றிலும் நம்பிக்கை இழந்து வருகிறோம் அல்லவா?" என்று ஷாவிடம் பத்திரிகை நிருபர் ஒருவர் கேட்டார்.

"முன்பெல்லாம் கடவுளிடம் நம்பிக்கை வைத்திருந்தோம். ஆனால், இப்பொழுது அதை மாற்றி, டாக்டரிடம் நம்பிக்கை வைத்திருக்கிறோம்" என்று பதில் அளித்தார் ஷா.

## தெரிந்து என்ன பயன்

பெரிய செல்வந்தர்கள் பலர், லண்டனில் உள்ள ஒரு ஆடம்பர ஹோட்டலுக்கு வந்து குவிந்துகொண்டு இருந்தார்கள்.

அதைக் கண்ட நண்பர் ஒருவர் ஷாவிடம், "இந்தச் செல்வந்தர்களுக்கு இவ்வளவு பணம் இருந்தும் என்ன பயன்? அதை எப்படி அனுபவிப்பது என்று அவர்களுக்குத் தெரியவில்லையே?" என்றார்.

"பணத்தை எப்படி அனுபவிப்பது என்று நமக்குத் தெரிந்திருந்தும் என்ன பயன்? நம்மிடம்தான் பணம் இல்லையே! அவர்களைக்காட்டிலும் நாம் எந்தவிதத்தில் சிறந்தவர்கள்?"என்று பதில் அளித்தார் ஷா.

## என்னால் இயலவில்லை

"என்னைக் காட்டிலும் அறிவாற்றல் குறைந்தவர்கள் பல மொழிகளைக் கற்றுக்கொள்கிறார்கள். என்னால் முடியவில்லையே, பாடுபட்டும்கூட இயலவில்லை" என்று கூறுகிறார் ஷா.

## யாருக்கு வெற்றி?

சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுது எல்லாம் ஷேக்ஸ்பியரைப் பற்றி கேலியாகப் பேசுவதும் கிண்டலாக எழுதுவதும் ஷாவுக்கு வழக்கமாகி விட்டது.

லண்டனில், ஷேக்ஸ்பியரின் வாசகர்கள் சிலர், ஷாவை மட்டந்தட்ட திட்டமிட்டார்கள்.

ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து, அதில் கலந்து கொண்டு பேசுமாறு ஷாவை அழைத்திருந்தார்கள் ஷேக்ஸ்பியர் வாசகர்கள்.

கூட்டத்தில் ஷா வழக்கம்போல் நகைச்சுவையாகப் பேசினார். என்றாலும், முன்பே திட்டமிட்டிருந்தபடியால் கூட்டத்தினர் ஷாவின் பேச்சை ரசித்துக் கைதட்டவில்லை.

மேலும், தலைமை வகித்தவரும் ஷாவைப்பற்றி ஏதோ கிண்டலாகக் கூறினார்.

அதற்கு மட்டும் கைதட்டி சிரித்தனர், ரசித்தனர் ஷேக்ஸ்பியர் வாசகர்கள். ஷாவை மட்டம் தட்டியதாக கருதினர்.

ஷா எழுந்து மறுபடியும் பேசத் தொடங்கினார்:

"ஷேக்ஸ்பியர் அபிமானிகளே! இப்பொழுது நான் கூறிய நகைச்சுவைச் சொற்பொழிவு ரசிக்கத் தக்கதாக இல்லை என்று குறை கூறப்படுகிறது.

"இப்பொழுது நான் கூறியவை அனைத்தும் என் சொந்த நகைச்சுவை அல்ல! ஷேக்ஸ்பியர் காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறிய ஷேக்ஸ்பியரின் சொந்த நகைச்சுவையே அது! உங்களால் அதை ரசிக்க இயலவில்லையானால், அதற்கு நான் பொறுப்பு அல்ல!" என்று கூறி முடித்தார் ஷா.

ஷேக்ஸ்பியரின் வாசகர்கள் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

## என்னுடைய தனிப்பண்பு

பெர்னார்ட்ஷா தம்மைப்பற்றியே பதினாறுகட்டுரைகள் எழுதி ஒரு சமயம் வெளியிட்டிருந்தார். அவை அனைத்தும் அவருடைய சொந்த வாழ்க்கையைப் பற்றியவையே.

குழந்தைப் பருவத்தில் தொடங்கி, இப்பொழுது வரை தம் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை, தமக்கே உரிய தனிப்பாணியில் எழுதி இருக்கிறார்.

இக்கட்டுரைகள், "தொணதொணவென்று பேசும் தொண்டு கிழவனின் பிதற்றல்கள்தானா என்று தெரிய வில்லை" என அவரே கூறுகிறார்.

"நான் மகிழ்ச்சியாய் இல்லை. மகிழ்ச்சியாய் இருக்க விரும்பவும் இல்லை. அதற்கு எனக்கு அவகாசமோ, ஆசையோ கிடையாது. யதார்த்த மனப்பான்மையுடன் விஷயங்களைக் கவனிப்பதுதான் என்னுடைய தனிப் பண்பு" என்று எழுதுகிறார்.

அதற்கு அவர் உதாரணம் காட்டுகிறார்.

"இந்திய ராஜா ஒருவர் தமது ஆசை மனைவியுடன் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது ராணியின் உடையில் திடீரென்று நெருப்புப் பற்றிக் கொண்டது. அவள் எரிந்து சாம்பலானாள். பரிவாரங்கள் எல்லாம் அழுது புலம்பினார்கள். உடனே அந்த ராஜா என்ன செய்தார் தெரியுமா? ராணியின் சாம்பலை பெருக்கித் தள்ளிவிட்டு, வான்கோழிக் கறியை எனக்குக் கொண்டு வாருங்கள் என்று அவர் உத்தரவிட்டார். அந்த ராஜாவை கிழக்கத்திய பெர்னார்ட்ஷா என்று சொல்லலாம்!"

## பின்வாங்கிச் செல்லுதல்

1876–ல் அயர்லாந்தை விட்டு, லண்டனுக்குச் சென்ற ஷா 1905–ல் அதாவது 29 ஆண்டுகளுக்குப் பிறகு, டப்ளினுக்குச் சென்றார். அதுவும் தம் மனைவியின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிப் போக இசைந்தாராம்.

அப்போது நேராக டப்ளினுக்குச் செல்லாமல், அயர்லாந்தின் தென் பகுதிக்குச் சென்று, அங்கிருந்து டப்ளின் நகருக்குச் சென்றார். லண்டனிலிருந்து நேராகவே சென்றிருக்கலாம். ஆனால், அதுதான் வந்த வழி என்றும், வந்த வழியாகத் திரும்பிப் போகக்கூடாது என்றும், எப்பொழுதும் பின்வாங்கிச் செல்லக்கூடாது என்பதே தம் கொள்கை" என்றும் கூறினார்.

## பள்ளிப் படிப்பினால் பயன் என்ன?

பள்ளிக்கூடம் என் உள்ளத்தைக் கவரவில்லை ஆகவே, அங்கே கற்றுக் கொண்டது ஒன்றும் இல்லை. அதைக் குறித்து இப்பொழுது நினைத்து மகிழ்கின்றேன். ஏனென்றால், செயற்கையான உடல் உழைப்பு உடலைக் கெடுப்பது போல், செயற்கையான மூளை உழைப்பும் தீமையே செய்யும் என்று நான் உணர்கிறேன். ஆகவே, விருப்பம் இல்லாதவைகளைத் திணித்துப் புகட்டும் கல்வி முறையானது மரத்தூளை வற்புறுத்தி உண்ணும்படி செய்வது போலத்தான். குழந்தையின் கையையும், காலையும் இரும்பால் பிணைத்து பெற்றோர் விரும்பும்போது, விரும்பியபடி ஆட்டி அசைத்துப் பழக்கினால், அந்தக் குழந்தை நடை முதலியவற்றை கற்றுக்கொள்ள இயலுமா? டப்ளின் நகரிலிருந்த டிரினிட்டி கல்லூரியில் படித்தவர்கள், பயனற்றவர்களாக இருந்ததை நான் இளமையிலேயே கண்டு அதையும் வெறுத்துவிட்டேன்" என்று குறிப்பிடுகிறார் ஷா.

## கிராமத்து மக்கள்

ஷா சிறுவயதில் சித்தியின் வீட்டில் இருக்கும்போது குதிரைமீது ஏற்றி வைத்து சவாரி செய்யும்படி வற்புறுத்தினார். அவருடைய சித்தி, ஷா பயந்து குதிரைமீது இருந்த படியே நடு நடுங்கி, என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தாராம்.

அதைப்பற்றி ஷா.

"கிராமத்து மக்கள், இப்படி சிறுவர்கள் உடலில் முரட்டுத் தன்மையை வளர்க்கத் தயங்குவதே இல்லை. ஆனால், உள்ளத்தைக் கோழையாக்கி வருகிறார்கள். துணிகரமான செயல்களைப் பற்றிய பேச்சுக்களை அவர்களிடம் எப்பொழுதும் கேட்கலாம். ஆனால், பயமற்ற எண்ணங்களைப் பற்றி அறியவே முடியாது. உடலால் முரடராகவும், உள்ளத்தால் மெல்லியராகவும் வளர்க்கவே அவர்களால் முடியும்" என்று கூறுகிறார்.

## உண்மையை உணர முடிந்தது

இளமையில் ஷா பைபிளைப் படிக்காததோடு அதைப் பழித்திருக்கிறார். அதைக் கண்ட தந்தை, அவரைக் கண்டித்து, அதன் பெருமைகளையும், படித்து உணர வேண்டிய கடமையையும் எடுத்துக் கூறினார். ஆயினும், ஷாவின் மனம் மாறவில்லை. தாயோ மக்களுக்குச் சமயத்துறையில் ஒன்றும் வழிகாட்டவில்லை. இதைப்பற்றி ஷா.

"என் தாய், இப்படி கவலை இல்லாமல் வளர்த்த முறையால், என் சகோதரிகள் இருவருக்கும் பெரிய தீமையே விளைந்தது. ஆனால், என்னைப் பொறுத்த வரையில் என் அறிவில் சமயத்துறை அழியவில்லை. உண்மையான

நம்பிக்கைகள் குடிபுகுவதற்கு வழிவகுத்தாற் போல் இருந்தது. அறிவுக்குச் சார்ந்த உண்மைகளை உணர முடிந்தது" என்று குறிப்பிடுகிறார்.

## சங்கத்துக்கு வெற்றி

பேபியன் சங்கத்தின் மீது ஒருமுறை எச்.ஜி வெல்ஸ் வெறுப்படைந்து பல குற்றச்சாட்டுகளைக் கூறினார். அவருடைய தாக்குதலைச் சமாளித்து, வெற்றிபெறக் கூடியவர் ஷா ஒருவரே என்று கருதினார்கள் சங்கத்தின் உறுப்பினர்கள், ஷாவிடம் சென்று விவரத்தைக் கூறினார்களா. ஷாவும் அதற்கு இசைந்து, கூட்டத்துக்கு வந்தார். குற்றச்சாட்டுகளுக்கு தகுந்தபடி காரணம் சொல்லிக் கொண்டு வந்தார். இறுதியில், வெல்ஸின் அறிக்கைக்கு சங்கத்தினர் பதில் அனுப்பாமல் காலம் தாழ்த்தியதற்கு காரணம் கூறத் தொடங்கினார்.

"உண்மைதான், கால தாமதத்தைப்பற்றி வெல்ஸ் அறிய வேண்டியது பொருத்தம்தான். ஆனால், எவ்வளவு காலம் யாரால் கழிந்தது என்பதைக் கூறுகிறேன். வெல்ஸால் ஏற்பட்ட காலதாமதம் பத்து மாதங்கள். சங்கத்தின் பழைய பெருச்சாளிகளால் ஆறு வாரங்கள், அதற்கு உரிய குழு நடவடிக்கை மேற்கொண்டபோது வெல்ஸ் அமெரிக்காவைப் பற்றி புத்தகம் எழுதிக் கொண்டிருந்தார். ஆனால், அவருடைய அறிக்கைக்கு நான் விடை எழுதிக்

கொண்டிருந்த காலத்தில், ஒரு நாடகம் எழுதி முடித்தேன்" என்று கூறி, தொடர்ந்து பேசாமல் நின்றார். எதையோ எண்ணுவதுபோல் மறந்தது மாதிரி அவருடைய பார்வை மேல் நோக்கித் திரும்பியது. கூட்டத்தினர் அமைதி இழந்தனர். சிறிது நேரத்தில் ஷா பேச்சைத் தொடர்ந்தார். "பெருமக்களே! சிறிது நேரம் என் பேச்சை நிறுத்திப் பார்த்தேன். வெல்ஸ் என் நாடகத்தையாவது பாராட்டி, 'அதுவும் ஒரு நல்ல நாடகமாகவே எழுதினார்' என்று சொல்வார் என்று எதிர் பார்த்து ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பார்த்தேன்" என்று கூறிமுடித்தார்.

கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். ஷா உட்கார்ந்தார் பேபியன் சங்கத்துக்கு வெற்றித் தேடித் தந்தார். இந்தத் தோல்விக்குப் பிறகு, வெல்ஸ் இரண்டு ஆண்டுகள் கழித்து, அந்தச் சங்கத்திலிருந்து விலகி விட்டார்.

## தனிச்சிறப்புடையவர்

"நான் ஒரு தனிச் சிறப்புடைய மனிதன் என்று என்னைக் கூறலாம். நாடகங்களும் நூல்களும் எழுதுவதைப் பொறுத்த வரையில் அது உண்மையே! ஆனால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் மற்றவர்கள் செய்ய முடியாததைச் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள். ஆகையால், இதில் ஒன்றும் உயர்வு இல்லை.

"வறுமை, செல்வம், அடிமைத்தனம், ஆளும்வகை ஆகியவற்றில் எல்லாம் எனக்கு இருந்த அனுபவத்தைக் கருதினால், நான் தனிப்போக்கு உடையவன் என்று கருதலாம். அல்லது – மிகச் சுவையானது என்று சொல்லி என்னை ஏமாற்றி, ஏதோ உபயோகமற்ற மருந்தை சிறுவயதில் என் வாயில் ஊற்றினர்களே அந்தக் காரணத்தாலோ எந்தக் காரணத்தாலோ பிறரால் சலித்தும், நொந்தும், மெலிந்தும், வருந்தியும், களைத்தும், துன்புற்றபோதெல்லாம் மிக நன்றாக இன்புறுவதாக எண்ணிக்கொண்டு உறுதியாக வாழ்ந்து வந்திருக்கிறேன். இந்த வகையிலுந்தான் தனிப்போக்கு உடையவன் என்று கருதலாம். இவற்றைத் தவிர வேறு தனிச்சிறப்பு எனக்கு இல்லை." – இவ்வாறு அவர் எழுதியதைக் காணும்போது இந்த ஷா வேறு ஒருவரோ என்று தோன்றலாம்.

## எனக்காக நண்பர் விட்டுக்கொடுத்தார்

ஷாவின் பாதத்தில் கட்டி எழும்பி அறுவை சிகிச்சை செய்துகொண்டார், அப்பொழுது, அவரைக் காதலித்த டவுன் ஷெண்ட் என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்காகப் பதிவு நிலையத்திற்குச் சென்றார். எப்படிச் சென்றார்? கந்தலான பழைய சட்டையுடன் இரண்டு ஊன்று கோலுடன், நொண்டியபடியே ஷா காட்சியளித்தார்.

அவருடைய இரண்டு நண்பர்கள் சிறந்த உடை அணிந்துகொண்டு சாட்சிக்காக வந்திருந்தனர்.

அந்த நிகழ்ச்சியைப் பற்றி ஷா கூறுகிறார்:

"அவர்களில் ஒருவர் மணமகனாக இருக்கவேண்டும் என்று பதிவாளர் எண்ணிவிட்டார். திருமணக் கூட்டத்தில் தவறாமல் வந்து காட்சி அளிக்கும் பிச்சைக்காரர்களில் ஒருவராக என்னை நினைத்து விட்டார். சாட்சிக்காக வந்திருந்த நண்பர் வாலஸ்க்குத் திருமணம் செய்து முடிக்க அவர் முற்பட்டார். நல்ல காலமாக, வாலஸ், 'சான்று மொழிகள்' என்று எண்ணிப் பதிவாளர், சொன்னதைத் திரும்பிச் சொல்லி வந்து, கடைசியில் நீண்டவாசகங்களாக இருப்பதை உணர்ந்து, தயங்கிப் பின்வாங்கினார். இவ்வாறு, எனக்காக என் மனைவியை விட்டுக்கொடுத்தார்" என்று வேடிக்கையாக எழுதியுள்ளார்.

## நான் ஒரு ஷேக்ஸ்பியர்

தமக்குக் கிரேக்க மொழியிலும் லத்தீன் மொழியிலும் எவ்வளவு அறிவு உண்டு என்பதைப் பற்றி ஷா எழுதும் போது, "அந்த வகையில் நான்ஒரு ஷேக்ஸ்பியர்" என்று குறிப்பிட்டார்.

ஷேக்ஸ்பியருக்கும் அந்த இரண்டு மொழிகளும் தெரியாது.

## உயிர் இனங்களின் பாராட்டு

ஒரு சமயம் கணுக்கால் முறிந்து ஷா துன்புற்ற போது மருத்துவர்கள் அவர் உண்ணும் மரக்கறி உணவை குறை கூறிக்கொண்டிருந்தார்கள். அதற்கு ஷா,

"மிருகங்களைத் தின்று வாழ்வதவிடச் சாவதே நல்லது. என் சாவுக்கு கோச்சு வண்டிகள் என்னைத் தொடர்ந்து வரவேண்டாம். ஆடு, மாடு, பன்றி, கோழி ஆகியவை மந்தை மந்தையாக வரட்டும். உயிருடன் மீன் காட்சிசாலை ஒன்று தொடர்ந்து வரட்டும். இந்த உயிரினங்கள் எல்லாம் கருப்பு உடை அணியாமல், வெள்ளை உடை அணிந்து 'தங்களைத் தின்று, உயிர் வாழ்வதை வெறுத்துச் சாகத்துணிந்த மனிதன் இவன்' என்று என்னைப் பாராட்டிக்கொண்டு வரட்டும்" என்று பதில் அளித்தார்.

## அது அவர் குற்றமல்ல

"என்னுடைய கலையில் அழகு உணர்ச்சி இல்லாமல், என் ஒழுக்க உணர்ச்சியின் கோணலும், அறிவின் மாறுபாடும் காணப்பட்டால், அது என் குற்றம் அல்ல. என் வாழ்க்கை பெரும்பாலும் பெரிய நகரங்களிலேயே கழிந்தது. அங்கே அழகு உணர்ச்சிக்கு இடம் இல்லை. ஆனால், அறிவுக்கோ கொழுத்த உணவு கிடைத்தது. ஏழைகள் வாழும் குப்பங்களைப்பற்றி எண்ணி எண்ணியே அறிவும்

அலுத்துவிட்டது. இறுதியில் கலைஞன் என்னும் முறையில் அவற்றைப் பற்றியே சுவைபட எழுதும் கொடிய பழக்கமும் வந்து சேர்ந்தது. இதற்கு நான் என்ன செய்வேன்?" என்று அவரைப் பற்றி குறை கூறியவர்களுக்குப் பதில் கூறுவதுபோல் குறிப்பிடுகிறார் ஷா.

## ஒருவருக்கு மூன்று இடங்கள்

தம்முடைய நாடகம் ஒன்றுக்கு ஒருமுறை ஷா போயிருந்தார். அரங்கு நிறைந்திருப்பதைக் கண்டார். ஆனால், கணக்கைப் பார்த்தபோது, மூன்றில் ஒரு பங்குக்கே வருமானம் வந்ததை அறிந்தார். உடனே பொறுப்பாளருக்கு கடிதம் எழுதினார்.

"முழுக் கட்டணமும் செலுத்திய பிறகே, என் நாடகத்தைப் பார்க்க ஒருவர் உள்ளே வர வேண்டும். இது தெளிவாக விளக்க வேண்டும். இப்படிச் செய்வதால் மூன்றில் ஒரு பகுதி மக்களே நாடக அரங்கத்தில் இருந்தும் நாடகம் நடைபெற்றாலும் கவலை இல்லை. பணம் கொடுத்து நாடகம் காணவரும் பெருமக்கள் ஒவ்வொருவரும் மூன்று இடங்களைப் பயன்படுத்தலாம் என்றும், அவற்றில் தங்கள் குடை, கோட், தடி, கால் முதலியவற்றை வைத்துக் கொள்ளலாமென்றும் விளம்பரப் படுத்தலாம்" என்று குறிப்பிட்டார்.

## உணர்த்துவது எப்படி?

இசை, இலக்கியம், ஓவியம், நாடகம் எதைப்பற்றி ஷா மதிப்புரை எழுதினாலும் பிறருடைய மனத்தைத் தாக்குவதாகவே இருந்தது.

"தங்களுக்குத் தொல்லைதராத எதைப்பற்றியும் மக்கள் கவலைப்படமாட்டார்கள். ஆகவே, ஏதாவது ஒன்றை உணர்த்த வேண்டுமானால், அவர்களின் மனத்தை தாக்கும் வகையில் உணர்த்த வேண்டும். இல்லையானால், உணர்த்தாமல் இருந்து விடுவதே நல்லது" என்பது ஷாவின் கொள்கை.

## நான் எப்பேர்பட்டவன்

ஒரு நாடகம் எழுதி முடித்த பிறகு, அதில் கை வைத்துத் திருத்துவதற்கோ அல்லது மாற்றுவதற்கோ யாருக்குமே ஷா இடம் கொடுக்க மாட்டார். ஆஸ்திரியாவிலுள்ள மொழிபெயர்ப்பாளர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில்,

"என் நாடகங்களில் ஒரு வரியை விட்டுவிடவோ ஒரு காற்புள்ளியை மாற்றவோ கூடாது. எனக்குத் தெரியும்; நாடக உலகில் இருக்கின்ற வேலையாள் முதல் பொறுப்பாளர் வரையில் ஒவ்வொருவரும், நாடகத்தை எழுதிய ஆசிரியரைவிட தங்களுக்கு அதிகமாகத் தெரியும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி மாற்றினால், பலர்

விரும்புவார்கள் என்றும், வெற்றி அளிக்கும் என்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். அவர்களிடம் சொல்லுங்கள், நான் தலைகனத்தவன், ஆணவம் உடையவன், பிடிவாதக்காரன், அறிவாற்றலில் மேம்பட்டவன், காரணங்களுக்குச் செவிசாய்க்காதவன், என் நூல்களைப் பொறுத்தமட்டில் என் வழியில் செல்லத் துணிவு கொண்டவன் என்றெல்லாம் அவர்களுக்குத் தெரிவியுங்கள்" என்று குறிப்பிட்டார்.

## கைம்மாறு என்ன?

"மாதக்கணக்காக எவ்வளவோ அரும்பாடுபட்டு எழுதி முடித்த நாடகத்துக்குக் கைம்மாறாக நான் மக்களிடமிருந்து பெறுவது என்ன? அவர்கள் மூன்று மணி நேரம் என் நாடகத்தைக் கண்டுகளித்து சிரித்து நாடக அரங்கை விட்டு வெளியே சென்றதும், இது ஒரு நாடகமா? என்று ஒதுக்கிப் பேசிச் செல்வதே ஆகும்" என்று குறிப்பிடுகிறார் ஷா.

## சிக்கல்கள் எப்பொழுது?

ஷா தம்முடைய 93வது வயதில், அடுத்த வீட்டுக் காரரான ஸ்டீபன் வின்ஸ்டன் என்பவரிடம் பேசிக் கொண்டிருக்கையில், "தமக்கு 40 வது வயது, 60 வது வயது, 80–வது வயது இவையே தம்முடைய வாழ்க்கையில் சிக்கல் நிறைந்த வயதுகள்" என்று கூறினார்.

## அந்த நூலைப் படியுங்கள்

"மனிதனின் ஆயுள்காலத்தை அதிகரிப்பது எப்படி?" என்று நிருபர் ஒருவர் ஷாவிடம் கேட்டார்.

"நான் எழுதியிருக்கும் 'மெதுஸலா' என்னும் புத்தகத்தைப் படியுங்கள். அதில் சொல்லியிருப்பதற்கு மேல் நான் ஒன்று சொல்வதற்கு இல்லை.

"மரணம் வந்து என் வாசல் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறது. அது விரும்பத்தகாத விருந்தாளி அல்ல" என்று ஷா பதில் அளித்தார்.

## எதிர் நோக்குகிறது

மற்றொரு செய்தியில், "மரணம் என்னை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது. அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நான் சிரஞ்சீவியாக இருக்க விரும்பவில்லை" என்று ஷா கூறுகிறார்.

## முதுமையால் பயமா?

"முதுமை அடைந்துகொண்டு வருவதைப்பற்றி பயப்படாதீர்கள். 50 வயதிலிருந்து 60 வயது வரையிலும்,

நோயணுகாமல் பார்த்துக்கொண்டால், 80 வது வயது வரையும் உயிரோடு இருக்கமுடியும், பிறகு உண்மையிலேயே வாழ்க்கையை சுகமாக அனுபவிக்க முடியும்" என்று ஷா கூறுகிறார்.

## மீண்டும் அன்பளிப்பு

நூலாசிரியர் தாம் எழுதி, பிரசுரமான நூலை தமக்கு நெருங்கிய நண்பர்களுக்கு '....இன்னாருக்கு அன்பளிப்பு' என எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுப்பது வழக்கம்.

ஒரு சமயம் ஷா, பழைய புத்தகக் கடைக்குப் போயிருந்தார். அங்கே தம்முடைய கையொப்பத்துடன் கூடிய நூல் ஒன்று காணப்பட்டது. அதைப் பார்த்தார்.

நண்பர் ஒருவருக்கு தாம் அன்பளிப்பாகக் கொடுத்தது என்பது தெரியவந்தது. உடனே அதை விலை கொடுத்து வாங்கி, மீண்டும் அந்த நண்பருக்கே அனுப்பி வைத்துவிட்டார் ஷா.

## ஒருவரே புத்திசாலி

அயர்லாந்து நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த டிவேலராவிடம் ஷாவுக்கு அளவற்ற அன்பும், மதிப்பும் உண்டு.

முன்பு ஒரு சமயம், “உலக அரசியல் நிபுணர்களிலே டிவேலராதான் புத்திசாலி” என்று குறிப்பிட்டார் ஷா.

(அப்போது உலகப் போர் நிகழ்ந்தது. அயர்லாந்து மட்டுமே நடுநிலைமை வகித்தது).

## பளபளப்புக்குக் காரணம்

பத்திரிகை நிருபர் ஒருவர், ஷாவைப் பார்த்து “வயதான காலத்திலும் உங்கள் முகம் பளபளப்பாக இருக்கிறதே அதற்கு என்ன காரணம்?” என்று கேட்டாராம்.

“சோப், ஸ்நோ, பவுடர் எதையுமே நான் உபயோகிப்பதில்லை” என்று பதில் அளித்தார் ஷா.

அந்த ஆண்டில் அத்தகையப் பொருள்களின் விற்பனை பெரும் அளவு மந்தமாகிவிட்டதாம்!

## ஷா இல்லம்

ஹென்றி ஸால்ட் என்பவர் பெர்னார்ட்ஷாவுக்கு மிகவும் பிரியமான நண்பர். அவருக்கு ஷா பல கடிதங்கள் எழுதியுள்ளார்.

ஸால்ட் ஒரு குடிசையில் வாழ்வதாகக் கேள்வியுற்ற ஷா, “தங்களிடம் இருக்கும் என்னுடைய கடிதங்களை

யாருக்காவது விற்று, அதன் மூலம் ஒரு வீடு வாங்கி வாழலாமே" என்று எழுதியிருந்தார்.

"தங்களுடைய கடிதங்களை விற்றுப் பணமாக்கலாம் என்ற எண்ணம் எனக்கு இருந்தது. அதற்கு தாங்களே தன்னிச்சையாக அனுமதி கொடுத்துவிட்டதால் அப்படியே செய்கிறேன்; இது விஷயமாக, தங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்ளத் தயார்" என்று ஸால்ட் ஷாவுக்குப் பதில் எழுதினார்.

"அமெரிக்காவிலிருந்து என்னுடைய அசல் கைப்பிரதிகளை வாங்குவதற்காக ஒருவர் வந்து லண்டனில் தங்கி இருக்கிறார். அவரோடு எனக்குத் தொடர்பு இருக்கிறது, அவர் தங்களிடம் வரக்கூடும்" என்று ஷா ஸால்ட்டுக்குப் பதில் எழுதியிருந்தார்.

அமெரிக்கப் பிரதிநிதி மறுநாள் ஸால்ட்டிடம் வந்தார். பேச்சுவார்த்தை பேரம் நடந்து நிறைவேறி ஸால்ட்டிடம் இருந்த ஷாவின் கடிதங்கள் 36-ம் அமெரிக்கப் பிரதிநிதியிடம் சேர்ந்தன.

தாம் எதிர்பார்த்த தொகைக்கு மேலாகவே, தனக்குக் கிடைத்திருப்பதைக் கண்டு, ஸால்ட் ஆச்சரியத்தில் மூழ்கினார்.

மறுநாள் எச். ஜி. வெல்ஸிடமிருந்து, "அமெரிக்கப் பிரதிநிதியை தாம் கிளப்பில் சந்தித்ததாகவும்,

தங்களிடமிருந்து ஷாவின் கடிதங்களைப் பெற்ற விஷயத்தைப் பெருமையாய் எடுத்துச் சொன்னார் எனவும் ஸால்ட்டுக்குக் கடிதம் வந்தது.

ஷாவின் கடிதங்களை விற்றுவந்த பணத்தைக் கொண்டு ஒரு வீடு வாங்கி, அதற்கு "ஷா இல்லம்" என பெயர் சூட்டி அதில் வசித்து வருகிறார் ஸால்ட்.

மேலும் மேற்படி கடிதங்கள் விற்பனை தொடர்பாய் அதற்கு ராயல்டி தொகை வேறு ஸால்ட்டுக்கு வந்து கொண்டிருக்கிறது.

(இந்தியாவில் இப்படி யாரும் செய்வார்களா? – ஆசிரியன்)

## உன் தந்தையைப் போல்...

லண்டனில் வாழ்ந்த செல்வந்தர் ஒருவர், 'தம்முடைய வாழ்நாளில் யார் யாருடைய நூல்களை விரும்பிப் படித்தாரோ, அவர்களுக்கு நூறு பவுன் வீதம் தம் சொத்திலிருந்து கொடுக்க வேண்டும்' என உயில் எழுதி வைத்தார். செல்வந்தர் காலமான பிறகு, அவருடைய மகன், தந்தை எழுதி வைத்திருந்த உயிலின்படி, குறிப்பிட்ட ஆசிரியர்களிடம் சென்று பவுனைக் கொடுத்து வரும்போது, பெர்னார்ட்ஷாவிடமும் போய் விவரத்தைக் கூறி நூறு பவுனைக் கொடுத்தார்.

அதைப் பெற்றுக்கொண்ட ஷா, "உன் தந்தை செய்ததுபோல், மற்றவர்களும் செய்திருந்தால், மிக நன்றாக இருக்கும்" என்றார்.

## கலைக்குச் சவுக்கடி

ஷா எழுதிய மதிப்புரைகள் காரசாரமாகவும், விறுவிறுப்பாகவும் இருந்தன. அவற்றில் சில:

"இந்த வாரத்தில் கலை நல்ல சவுக்கடிபட்டு வருந்தியது. இன்ன இடத்தில் நடைபெற்ற விழாவின் பொருட்காட்சியே அதற்குக் காரணம்."

## வெறுப்பு வேண்டாம்

"இந்த நாடகத்தைப் பார்த்துவிட்டு வெறுப்பின்றி திரும்ப வேண்டுமானால், நாடகம் தொடங்கி நீண்ட நேரம் கழித்துச் செல்ல வேண்டும்; அது முடிவதற்கு முன்னரே திரும்பி வந்துவிட வேண்டும்.

## வற்புறுத்தக்கூடாது

"சில தியாகங்களைக் கட்டாயம் செய்யவேண்டும் என்று மக்களை வற்புறுத்தக்கூடாது. அவற்றுள் ஒன்று, இன்னாருடைய இசை அரங்குக்குச் சென்று கேட்க வேண்டும் என்பது" என்று ஒரு இசை அரங்கைத் தாக்கி எழுதினார்.

## முக்கிய நிகழ்ச்சி

சில சமயங்களில் தம்மைப்பற்றி எழுதியும் நகைச்சுவை ஊட்டுவார்.

"அண்மையில் இசை உலகத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சி எது என்றால், இன்புளூயன்ஸா காய்ச்சல் என்னைத் தாக்கியது; அல்லது நான் அந்தக் காய்ச்சலைப் பற்றிக் கொண்டதாகும்".

## குற்றம் எது?

"நடு நிலைமை, நாகரிகம், நீதி என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு, உணர்ந்ததற்கு மாறாக எழுதுவது கலைக்குச் செய்யும் குற்றமாகும்."

## நாடக அரங்கத்தோடு போர்

"இங்கிலாந்தில் உள்ள நாடக அரங்குகள், எதை எதைப்பற்றியோ விளக்கும் நாடகங்களுக்கு இடம் அளிக்கின்றன. ஆனால், மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய பொது அறிவு, சமயம், விஞ்ஞானம், அரசியல், ஒழுக்க உணர்ச்சி ஆகியவற்றுக்கு இடம் தருவதில்லை. அதனால்தான் நாடக அரங்குகளோடு நான் போர் தொடுக்கிறேன். அறிக்கைகளும், அறிவுரைகளும், கட்டுரைகளும் எழுதி அவற்றோடு போர் புரியவில்லை. நாடகங்கள் எழுதியே அந்தப் போரை நடத்துகிறேன்.

இதனால் லண்டன் நகர மக்கள் நாடகம் பார்க்கச் செல்லும்போது மனசாட்சியையும், மூளையையும் உடன் கொண்டு செல்லுமாறு செய்ய முடியும் என்று நம்புகிறேன். இப்போது அவர்கள் பைபிள் புத்தகத்தோடு மனசாட்சியையும் வீட்டில் வைத்துவிட்டே நாடகம் பார்க்கச் செல்லும் போக்கை ஒழிக்கவே, இந்த முயற்சியில் நான் ஈடுபட்டிருக்கிறேன்" என்று ஒரு முகவுரையில் ஷா கூறுகிறார்.

## கற்பனை உலக வாழ்க்கை

"வீட்டின் உள்ளேயே அடங்கி, உலகம் அறியாத பூச்சிகளுக்கு உண்மையான வாழ்வு இல்லாவிட்டாலும், கற்பனை உலகிலாவது, அவர்கள் அந்த வாழ்க்கையை உணரட்டும் என்றே நாடகங்களை நடிக்கச் செய்ததோடு நிற்காமல், புத்தகமாகவும் வெளியிடுகிறேன்" என்கிறார் ஷா.

"விலங்குகளைச் சார்ந்து, அவற்றை நம்பி வாழும் வாழ்க்கை, மக்களுக்கு இருக்கக்கூடாது. விலங்குகளோடு பழகப் பழக அவற்றின் தன்மையும் மக்களுக்கு அமைந்துவிடும். விலங்குகளை மேய்த்து வளர்க்கும் ஆட்சிகளுக்கு அவற்றின் முகத் தோற்றமும் வந்து சேர்கிறது."

## நானே அறிவாளி

பிரசித்தி பெற்ற நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரைக் குறைகூறிக் கொண்டிருப்பது பெர்னார்ட்ஷாவின் வழக்கம்.

"பிரசித்திபெற்ற ஷேக்ஸ்பியரை இவ்வாறு குறை கூறலாமா?" என்று ஒருவர் கேட்டார்.

"இந்த உண்மையை ஆராயக்கூடிய திறமை யாருக்கு உண்டோ, அவரிடமே இதைக் கேட்கவேண்டும். அப்படிப் பார்த்தால், இங்கிலாந்தின் மிகச் சிறந்த அறிவாளியிடம் செல்ல வேண்டும். ஆனால், அத்தகைய அறிவாளி நான்தான்!" என்றார் ஷா.

## மலர்களைக் கொய்வதா?

ஷாவின் இல்லத்தில் மலர்களோ, மலர்கள் வைக்கப்பட்ட கண்ணாடி ஜாடிகளோ அங்கே காணப்படவில்லை.

"ஷாவைக் காணவந்த ஒருவர், மலர்களின் மீது உங்களுக்கு மிகுந்த பிரியம் உண்டு எனக் கேள்விப்பட்டேனே?" என்று கேட்டார்.

"உண்மைதான்! குழந்தைகளிடமும் எனக்கு ஆசை தான். அதற்காகக் குழந்தைகளின் தலைகளைக் கொய்து அலங்கார ஜாடிகளில் வைத்து அழகுபடுத்த வேண்டும் என்பது இல்லையே! என்று பதில் அளித்தார் ஷா.

## அறிவின் வேலை எது?

"உண்மையான அறிவின் வேலை அனைத்தும் நகைச் சுவையுடன் கூடியதே! என்பது ஷாவின் கருத்து.

## உறுதியான கருத்து

"அரசியல் சுதந்திரத்தைவிட பொருளாதார சுதந்திரத்தையே ஷா அதிகமாக வற்புறுத்துகிறார். பொருளாதார சுதந்திரம் இல்லாமல் உண்மையான ஜனநாயகம் இல்லை. சமூகத்தில் எல்லோருக்கும் சம வருமானம் இருக்க வேண்டும். பல வகுப்பினருக்கிடையே திருமணம் அப்போது சாத்தியமாகும். கலப்பு மணத்தால் பிறக்கும் சந்ததிகள் ஆரோக்கியமாக இருக்கும். நாட்டின் ஆட்சி முறையில் 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக'ப் பங்குகொள்ளும்வரை அமைதியான வாழ்வு என்பது உலகில் சாத்தியமே இல்லை. சமூக வாழ்வில் ஆண் பெண் உறவுகளில் பூரண சமத்துவம் நிலவ வேண்டும். திருமணம் என்பது மாற்ற முடியாத மதச் சடங்காக – பிரிக்க முடியாத பந்தமாக இருக்கக் கூடாது, திருமண ரத்து உரிமை இருக்க வேண்டும்."

## நிகழ்காலமே பிரச்சினை

"நான் பல காலங்களைப் பற்றியும் எழுதுகிறேன். ஆனால், நிகழ்காலத்தைத் தவிர வேறு எந்தக் காலத்தைப் பற்றியும் நான் கற்பதில்லை. அந்த நிகழ்காலத்தையே இன்னும் நன்றாகக் கற்றுத் தேர்ச்சி பெறவில்லை. அதுவே என் வாழ்நாளில் நான் கற்றுத் தேற முடியாததாக இருக்கிறது."

## நடுத்தர வகுப்பு

"நடுத்தர வகுப்பே மிகவும் கேடானது. அந்த வகுப்பில் உள்ள பெண்களுக்கு மனைவி நிலையும், தாய்மை நிலையும் தவிர, வேறு தொழில் இல்லை. தொழில் இல்லாதப் பெண்களுக்கு வாழ்வதற்கு வேறு வழியும் இல்லை."

## அவர்களைப் பற்றி என்ன கவலை?

"நாகரிகம் மிகுந்த இடங்களில் சமய உணர்வு இல்லாதவர்கள் கோயிலுக்குப் போகிறார்கள். இசை ஞானம் இல்லாதவர்கள் இசையரங்குகளுக்குச் செல்கிறார்கள். நாடக ரசனை இல்லாதவர்கள் நாடக மன்றங்களுக்குப் போகிறார்கள். இவை அதிகரித்து விட்டன!

அதன் பயனாக, கோயில் வழிப்பாட்டு உரை பத்து நிமிடங்களில் சுருக்கமாக நடத்தும் அளவு குறைக்கப் பட்டிருக்கின்றது, நாடகங்களும் கூட இரண்டு மணி அளவுக்கு குறைக்கப்பட்டிருக்கின்றன. எனக்கு இதைப் பற்றிக் கவலை இல்லை. கணக்குத் தெரியாதவர்களைப் பற்றி ஐன்ஸ்டின் எப்படிக் கவலைப்படுவதில்லையோ அப்படியே நானும் இவர்களைப் பற்றிக் கவலைப்படு வதில்லை."

## இயந்திரமும் மனிதனும்

"சக்கரம் முதலான உருளைகளில் பட்டவுடன் காலையோ, கையையோ வெட்டி, நசுக்கி எறியக்கூடிய் இயந்திரத்தை, எந்த மனிதனும் அழிக்க விரும்புவதில்லை.

"ஆனால், ஒரு மனிதன் மற்றொருவனுக்குச் சிறு கெடுதல் செய்தாலும்கூட அவனைக் கொல்ல முற்படுவது இயல்பாக இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? இயந்திரமானது மனிதனைப் போன்றது அல்ல; ஆகையால் அதனிடம் அன்பு செலுத்தவும் முடியவில்லை. பகைக்கவும் முடியவில்லை. ஆனால், கெடுதல் செய்தவன் நம்மைப் போன்ற மனிதன்; ஆகையால் இவை இயலும்."

## அடிக்கும் தொழில்

"சண்டை போடுபவர்களாகவும் முரடர்களாகவும் இருப்பவர்கள் பெரும்பாலும் ஊக்கம் மிக்கவர்களாகவும், வேலை குறைந்தவர்களாகவும் இருப்பவர்களே. எனக்குத் தெரிந்த உதாரணம் ஒன்று: "தினமும் மனைவியை அடித்துக் கொண்டிருக்கும் வழக்கம் உள்ள ஒருவன், மேளம் அடிக்கும் தொழில் மேற்கொண்ட பிறகு மனைவியை அடிக்கும் அந்த வழக்கத்தையே விட்டு விட்டான்."

## நம்முடைய அனுபவம்

"நம்மைக் காட்டிலும் கீழானவர்கள் எவரையும் துன்புறுத்தலாம் என்று நம்பும்படியாக நாம் பழக்கப்பட்டிருக்கிறோம். ஏனென்றால், நாம் சிறுவர்களாக இருந்தபோது, நம்முடைய பெற்றோரும் ஆசிரியர்களும் நமக்கு இழைத்த துன்பங்களால் நாம் அடைந்த அனுபவம் அத்தகையது".

## எல்லாமே சிறைதான்!

"மிருகக்காட்சிசாலையில் உள்ள விலங்குகளைப் பார்த்துச் சிறையில் அடைபட்டிருக்கும் கைதி பொறாமைப் படுகிறான். அதற்குக் காரணம் என்ன? தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் விருப்பு வெறுப்பு இல்லாமல் அந்த விலங்குகளைப் பார்க்க வருகின்றனர். அந்த விலங்குகளைச் சீர்த்திருத்த வேண்டும் என்று வீணாக முற்படுவதில்லை. சிறை வாழ்வில் இந்த நன்மைகள் இல்லை. அப்படி இருந்தும், சிறை வாழ்வை அவ்வளவு கொடுமையாகக் கருதுவதில்லை. ஏனென்றால், பெரும் பான்மையான மக்கள் இளமையிலிருந்தே சிறை வாழ்வில் பழக்கப்பட்டவர்கள். பள்ளிக்கூடம், தொழிற்சாலை, அலுவலகம் ஆகியவை சிறைகளே. வீடும் கூட ஒரு சிறைதானே!"

# நோயும் மருத்துவமும்

"நோய்கள் பெருகப் பெருக மருத்துவர்களின் வருமானம் அதிகரிக்கிறதே தவிர, நோய்கள் குறைவதை ஒட்டி அமையவில்லை. அதனால் மக்கள் நோயற்ற வாழ்வு வாழ இயலவில்லை.

சுவீடனில் இருப்பதுபோல் குடும்பத்தில் நோய் பெருகப் பெருக, அந்தக் குடும்பத்து மருத்துவர்களின் வருமானம் குறையுமாறு செய்ய வேண்டும். அப்போது தான் நோய் உண்டாகாமல் காப்பாற்றும் முயற்சியில் மருத்துவர்களுக்கு அக்கறை உண்டாகும்."

# போட்டி மனப்பான்மை

"எந்தத் துறையிலும் போட்டியே இருக்கக்கூடாது; போட்டி ஒழிய வேண்டும். சிறப்பாக கல்வித் துறையில் தேர்வு வைத்துப் போட்டியிடச் செய்யும் முறையை ஷா விரும்பவில்லை.

ஒரு மாணவன், மற்றொருவனின் அறியாமையையும் குறையையும், தோல்வியையும் கண்டு மகிழ்ச்சி அடையும் மனப்பான்மைக்கு அந்தத் தேர்வுப் போட்டி இடம் அளிக்கிறது.

மற்றவனை தோல்வியுறச் செய்வதை நோக்கமாகக் கொள்ள கற்பிக்கிறது. இத்தகைய மனப்பான்மை நல்ல சமுதாய அமைப்புக்கு இடையூறாகும்" என்று கூறுகிறார் ஷா.

# அப்பாவி பொதுமக்கள்

ஆட்சி செய்வோர், தங்கள் உத்தரவுகளுக்குக் காரணம் கூறி, விளக்காமல் இருக்கிறார்கள். மற்றொரு பக்கம் காரணம் கூறினாலும் தெரிந்துகொள்ள முடியாத பொதுமக்கள் இருந்தால் என்ன செய்ய இயலும்.

அரசியல், தொழில், குடும்பம் ஆகியவற்றில் உள்ள ஆட்சி முறையானது, பெரும்பாலும் ஆணையிடுவதாலும் ஆணைகளுக்குக் கீழ்ப்படிவதாலுமே நடைபெற வேண்டியதிருக்கிறது. 'காரணம் கேட்கக்கூடாது; சொன்னபடி செய்' என்னும் சொற்களைக் குழந்தைகளிடத்திலும் இராணுவ வீரர்களிடத்திலும் சொல்வது போலவே, ஏறக்குறைய எல்லோரிடத்திலும் சொல்ல வேண்டியிருக்கின்றது. நல்ல காலமாக, பொதுமக்களில் பெரும்பாலோர் காரணத்தை ஆராய விரும்புவதில்லை; சிந்திப்பது ஒரு தொல்லை என்று அதற்கு இடம் தராமல் தப்பித்து மகிழ்ச்சி அடைகின்றனர்.

திறமையான சிந்தனையாளர்களோ, தங்களுக்குத் தெரிந்த துறையில் மட்டும் சிந்தித்துப் பார்த்து, அந்த அளவில் அமைதியோடு இருந்து வருகின்றனர்.

மற்ற துறைகளில் போலீசார், தையற்காரர், தச்சர் முதலானோர் சொல்வதைக் கேட்டு அப்படியே தயங்காமல் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். விளக்கம் கேட்பதும் இல்லை. சொன்னால் கேட்பதும் இல்லை."

## திருட்டில் வேறுபாடு

"இன்று சிறையில் அடைபட்டிருக்கும் திருடன் மற்றவர்களைக் காட்டிலும் நேர்மையற்றவன் என்றோ, உண்மையற்றவன் என்றோ சொல்ல முடியாது, அறியாமையால், சமுதாய வழக்கத்திற்கு மாறான வழியில் திருடியவனே பெரும்பாலும் திருடனாகக் கருதப்படுகிறான். அவனே சிறைக்கும் செல்கிறான். ஆனால், அவனைப் போன்ற மற்றொருவன் தகுந்த முறையைப் பின்பற்றுவதால் பாராளுமன்றத்துக்குப் போகிறான்."

## திருமணம் எதற்கு?

திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று பெண்கள் மட்டும் விரும்பவில்லை. ஆண்களும் விரும்புகிறார்கள். திருமணத்தால் நன்மை ஏற்படும் என்ற கருத்தில் அதை சிலர் விரும்புகிறார்கள்.

தனி வாழ்க்கையில் செலவு அதிகம், நலமும் குறைவு என்னும் பயனைக் கணக்கிட்டு, மனைவியால் அதிகச் செலவு இல்லாமல் வீட்டுக் கடமைகள் நிறைவேறுவதால் பயன் உண்டு என்று கருதி சிலர் திருமணம் செய்து கொள்கின்றனர்."

## குழந்தைப் பாசம்

குழந்தைச் செல்வம் இல்லாதவர்களே, மற்றவர்களைக் காட்டிலும் அதிக அளவில் திருமண ரத்துச் செய்து கொள்ளுகின்றனர். பெற்றோரின் திருமண ரத்துக்கு குழந்தைகளே தடையாக இருக்கின்றன. கணவன்–மனைவி இருவருக்கும் குழந்தைகளிடத்தில் பொதுவான அக்கறை இருப்பதே அதற்குக் காரணம்.

குழந்தைகள் இல்லையானால் எத்தனையோ குடும்பங்களில் கணவன்–மனைவி வாழ்க்கை முறிந்து போயிருக்கும்.

## பிரிந்து செல்வது

"பறவைகள் கூடுகளிலிருந்து பறந்து போவதுபோல் குழந்தைகள் போதிய வளர்ச்சி அடைந்த பிறகு, தாய்மார்களிடமிருந்து பிரிந்து போய்விட வேண்டும். அதுவே தாய்மைக்குக் கடமை ஆகும்".

## உரிமையில் வேறுபாடு

"செல்வந்தர் சமுதாயத்துக்கு எந்தவிதமான தொண்டும் செய்யாமலேயே வாழ்ந்து வருகிறார். ஆனால், அவருடைய நிலத்தின் மீது உள்ள உரிமையோ பரம்பரை பரம்பரையாக (வழி வழியாக) பாத்தியம் கொண்டாடப் பட்டு வருகிறது.

சமுதாயத்துக்குத் தொண்டுபுரியும் நூல் ஆசிரியர்களுக்குத் தாங்கள் இயற்றிய நூல்களின் மீது உள்ள உரிமையானது அவர்களுடைய வாழ்நாளுக்குப் பிறகு ஐம்பது ஆண்டுகள் மட்டுமே இருக்கிறது.

நூல் ஆசிரியரைவிடச் சிறந்த தொண்டு ெ நாகரிக வாழ்க்கைக்கு உதவியாகப் பல புதிய கருவி சாதனங்களையும் கண்டுபிடித்து விஞ்ஞானிகளுக்கு அந்தக் கருவிகளைப் பற்றி பதினான்கு ஆண்டுகளுக்கு மேல் இல்லை பதினான்கு ஆண்டுகளும் ஒரே முறையில் இல்ல ஆண்டுகளுக்குப் பிறகு மறுமுறை ஏழு ஆ பெறக்கூடியதாகவே இருக்கிறது" என்று குறைபாடு சுட்டிக் காட்டுகிறார் ஷா.

## திருமண வேட்டை

ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்களுக்கு, பருவம் வந்தபின் மணமகனைத் தேடி வேட்டையானது வழக்கமாகிவிட்டது. மனிதத் த இது இழுக்காக இருக்கிறது. ஆனால் இப்ே சமுதாய அமைப்பில் இதைத் தவிர, வேறு வழி இ இப்படித் தேட மறுத்து வெறுமனே இருக்கும் பெற் நல்லப் பெற்றோரே அல்லர். அவர்கள் எத்தகைய உய வாழ்க்கை வாழ்ந்தாலும் பயனற்றதே!

## ஏன் என்பது ஒழிய வேண்டும்

கணவனும் மனைவியும், திருமண ரத்துக்காக நீதி மன்றங்களில் வழக்குத் தொடரும்போது, "நீங்கள் ஏன் பிரிந்துவிட விரும்புகிறீர்கள்?" என்ற ஒரு கேள்விமட்டும் கேட்கவே கூடாது. தடை இல்லாமல் ரத்து உரிமை அளிக்கப்படவேண்டும்.

"ஏன் பிரிகிறீர்கள்" என்று கேட்கும் வழக்கம் இருப்பதால், ஒருவர் மற்றொருவர் மீது குறை கூற முன்வருகின்றனர். அதற்காக இல்லாததையும், பொல்லாததையும் கூறுகின்றனர். உலகத்தாறும் அவற்றை விரும்பி எதிர்பார்க்கின்றனர்.

ஏன் என்ற கேள்வியே ஒழிந்தால், எல்லாம் சீராகும்; வழக்குகளும் குறையும்.

பெண்களுக்குப் பொருளாதார உரிமை வந்தால், பெண்ணின் பிற்போக்கும், அடிமைத்தனமும் அடியோடு ஒழியும்; போலி மணமும் அழியும்.

## பெண்ணுக்கு உரிமை

"அரசியலில் மக்கள் ஆட்சி நடைபெறும்போது ஆண்களும் பெண்களும் சம எண்ணிக்கையுடையவர்களாக இடம்பெற வேண்டும். ஏனென்றால் பெண்களுக்கு உள்ள

எண்ணற்றத் திறமையை அவர்கள் பொது வாழ்க்கையில் பொறுப்பு உணர்ந்து பயன்படுத்த வேண்டும். அவர்களுடைய ஆற்றலானது பொதுமக்களின் முன்னேற்றத்துக்கு இடைவிடாமல் உதவ வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

பொதுக் கடமைகளில் இருபாலாரும் ஈடுபடக் கூடாது. ஒரு பாலாருக்கு மட்டுமே இடம் இருக்கவேண்டும் என்று ஏற்பட்டால், நான் அவற்றைப் பெண்களின் பொறுப்பிலேயே விட்டுவிட வேண்டும் என்றே கூறுவேன்.

ஆண்களுக்கு உணவு அளித்து, வளர்ப்பதிலும் ஆட்சி செலுத்துவதிலும் பெண்கள் பயிற்சி பெற்றிருக்கின்றனர். அந்தப் பயிற்சியால், அந்தத் திறமையானது அவர்களுக்கு இயற்கை உணர்வுபோல் ஆகிவிட்டது. ஆனால், ஆண்களோ எப்போதும் பெண்களை ஆளமுடிந்ததில்லை. ஆகையால், பெண்களின் பொறுப்பில் பொது வாழ்க்கையை விடுவதே சிறந்தது.

என்னைப் பொறுத்த வகையில், என் வாழ்நாள் முழுதும், நான் பெண்களின் உதவியைப் பெற்றுச் சார்ந்தவனாகவே இருந்துவருகிறேன். இதை நான் நன்றாக உணர்கிறேன். அவர்களுடைய அன்புக்கும் ஆதரவுக்கும் உரியவனாக நான் நடந்து கொள்ளாவிட்டால், அவர்கள் விழிப்படைந்து, என்னால் இனி பயன் இல்லை என்று கண்டபோது, பெண் தேனீக்களைப்போல் என்னை ஒழித்து விடுவார்கள்

என்பதையும் நான் நன்கு அறிவேன். ஆகையால், பெண்கள் மட்டுமே நடத்துமாறு ஏற்படும் அரசியலில் ஓர் ஆபத்தும் உள்ளது. பெண்கள், ஆண்களைக் காட்டிலும் அதிகாரத்தை மிகவும் விரும்புகிறவர்கள். அதனால் ஆண்களின்மீது பொறாமை கொண்டு அவர்களை அளவுக்கு மேல் உண்ணவும், உடுக்கவும் செய்து, புகழவும் புகழ்ந்து, முற்றிலும் பயனற்றவர்களாக ஆக்கி வாக்குரிமை இழந்துவிடச் செய்துவிடுவார்கள். இந்த இடையூறு இருப்பதால் நூற்றுக்கு ஐம்பது வீதம் இருபாலரும் இடம் பெறுவதே நல்லது" என்று கூறுகிறார் ஷா.

## நோபல் பரிசு எதற்கு

இலக்கியத்துக்கான நோபல் பரிசு, 1925–ல் ஷாவுக்கு அளிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதைப் பற்றி ஷா:

"இந்த ஆண்டில் எந்த நூலையும் எழுதி நான் வெளியிடவில்லை. உலகம் அதைக் கண்டு விடுதலை உணர்ச்சியோடு மகிழ்ந்து எனக்கு நன்றி பாராட்டிச் செய்த செயல் இது என்று கூறியதோடு, பரிசு வேண்டியதில்லை என்றும் திருப்பி அனுப்பிவிட்டார்.

"இந்தப் பரிசால் கிடைக்கும் பணம், கடலில் தத்தளித்து, நீந்திக் கரையேறிவிட்ட ஒருவனுக்காக எறியப்பட்ட 'உயிர் காப்புச் சாதனம்' போன்றது!" என்று பதில் எழுதினார் ஷா.

அவர் நோபல் பரிசை ஏற்க மறுத்ததும், "நீங்கள் வளத்தோடு வாழ்வதால், எங்களுக்குக் கொடுத்து உதவுங்கள்" என்ற கோரிக்கைகள் ஏராளமாக வந்தன.

ஷாவுக்கு இது தொல்லையாக இருந்தது. கடைசியில் பரிசைப் பெற்றுக்கொள்ள இசைந்தார். இங்கிலாந்துக்கும் சுவீடனுக்கும் இலக்கியத் தொடர்பு ஏற்படுத்தும் தொண்டுக்கு அந்தத் தொகையை அளித்துவிட்டார் ஷா.

## கொள்ளைக்காரர்கள்

கொள்ளைக்காரனைப் பார்த்து, "தாங்கள் யார்?" என்று கேட்கிறார் ஒரு முதலாளி.

"நான் கொள்ளைக்காரன்; பணக்காரர்களைக் கொள்ளையடித்து வாழ்கிறேன். தாங்கள் யார்?" என்று கேட்கிறான் கொள்ளைக்காரன்.

" நான் முதலாளி; ஏழைகளைக் கொள்ளையடித்து வாழ்கிறேன்" என்கிறார் முதலாளி.

(ஷாவின் நாடகத்தில் இப்படி ஒரு குறிப்பு)

## எத்தனை வயது?

நாகரிக மங்கை ஒருத்தி ஷாவைப் பார்க்க வந்திருந்தாள். சிறிது நேரம் உரையாடலுக்கு மத்தியில்,

"மிஸ்டர் ஷா என்னைப் பார்த்தால் எவ்வளவு வயது இருக்கும் என்று தெரிகிறதா?" என்று பெருமையோடு கேட்டாள் அவள்.

அவளை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார் ஷா.

புன்னகையோடு, ஷா என்ன சொல்லப் போகிறார் என்பதை ஆவலோடு எதிர்பார்த்திருந்த அந்த மங்கையை நோக்கி, "மங்கையே, உங்கள் பல்லைக் கவனித்தால் பதினெட்டு வயது இருக்கும் என்று தெரிகிறது. தலை முடியைப் பார்த்தால் பத்தொன்பது இருக்கலாமோ என்று தோன்றுகிறது. நீங்கள் நடந்து கொள்கிற தன்மையைப் பார்த்தால் பதினான்கு வயது பெண்ணைப் போல் காண்கிறது" என்றார்.

மங்கையின் உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. அதை மறைத்துக் கொள்வதுபோல் பாவனை செய்து, ஷாவை நோக்கி, "சரி, அது இருக்கட்டும்; என் வயது இன்னது என்று திட்டமாகக் கூறமுடியுமா?" என்று மறுபடியும் கேட்டாள்.

ஷா சிறிதும் தயங்காமல், சரி, சரி 18, 19, 14 இம்மூன்று தொகைகளையும் கூட்டிப் பாருங்களம்மா 51 என்று பளிச்சென்று சொல்லிவிட்டார்.

## தலைவலிக்கு மருந்து உண்டா?

ஷா நெடுநேரம் உட்கார்ந்தவாறு உழைக்கும் மூளை உழைப்பின் காரணமாக தீராத தலைவலி ஏற்பட்டது.

விஞ்ஞானத் துறை எவ்வளவோ முன்னேறி இருந்தும் தலைவலிக்கு மருத்துவர்கள் தக்க மருந்தைக் கண்டுபிடிக்காததைக் குற்றகூறினார்.

வட துருவத்தைக் கண்டு வந்த நான் சென் என்பவரை ஷாவுக்கு அறிமுகப்படுத்தியபோது, ஷா அவரிடம், "தலைவலி தீர்க்கும் மருந்து ஏதேனும் தங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியாது" என்றார் நான்சென்.

"கண்டுபிடிக்க முயற்சி ஏதேனும் செய்ததுண்டா?" என்றார் ஷா. "இல்லை" என்றார் அவர்.

"உங்கள் வாழ்நாள் முழுதும் வட துருவத்தைக் கண்டுபிடிக்கக் கழித்திருக்கிறீர்கள். உலகில் வாழும் மக்கள் எவரும் வட துருவத்தைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப்படவில்லை. ஆனால் எல்லோரும் அழுது கூக்குரலிட்டு ஆவலோடு எதிர்பார்க்கும் தலைவலி மருந்தை நீங்கள் கண்டுபிடிக்க முயற்சி செய்யாதது விந்தையே" என்றார் ஷா.

## உயிருக்கு உயர்வு

உலகில் உள்ள எல்லாவற்றிலும் உயர்ந்த மதிப்புடையது உயிரே! அதை வீணடிப்பதே குற்றங்களில் கொடிய குற்றமாகும். சிறை வாழ்க்கையானது குற்றவாளியின்

உயிரைப் போக்காமல் இருக்கலாம். ஆனால், மிகக் கொடுமையான முறையில் அந்த உயிரைக் கெடுத்து வீணாக்கி விடுகிறது.

## கோழைத்தனம்

"பழக்க வழக்கங்களை தெய்வீகம் என மதிக்காதவர்களை பொல்லாதவர்கள் என மற்றவர்கள் எண்ணத் தலைப்படுகிறார்கள். அவர்களுடைய இயல்பான கோழைத்தன்மையே அதற்குக் காரணமாகும்.

புதுமையான சிந்தனையாளர், பழக்க வழக்கங்களை மதிக்கவில்லை என்றால், மற்றவர்கள் சார்ந்திருக்கும் வாழ்க்கையின் அடிப்படையை மதிக்காமல் அமைதியைக் குலைக்கிறார் என்று கருதுகிறார்கள். தவிர, முன்பு இருந்த கடமைகளோடு சேர்ந்து, பல புதிய சுமைகளும் இவரால் சமுதாயத்தில் உண்டாகின்றன. மற்றவர்கள் அவருடைய போக்கைக் கண்டு அஞ்சுவதற்கு உண்மையான காரணம் இதுவே".

## ரப்பரின் உபயோகம்

ஷா இலங்கைக்குப் போயிருந்தபோது பத்திரிகை நிருபர் ஒருவர் "ரப்பரின் தன்மையைப் பற்றி தங்கள் கருத்து என்ன?" என்று கேட்டார்.

"ரப்பரைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், அரசியல் மேதாவிகளின் மனச்சாட்சிகளை அமைப்பதற்கு ரப்பர் பெரிதும் உபயோகமாகிறது என்பதை அறிவேன். அத்தகைய ரப்பரை நீங்களும் இங்கே பயிரிடுகிறீர்கள் என்று நினைக்கிறேன்" என்று பதில் அளித்தார் ஷா.

## மனச்சாட்சி உறுத்தல்

ஷாவின் தாய் இசையில் வல்லுநர், ஷா சில சமயங்களில் தவறான இசையைப் பாடியதைக் கேட்ட அவருடைய தாய் உடனே எழுந்து வெளியே போய், சிறிது நேரம் அழுது விட்டுப் பிறகு ஆறுதலோடு திரும்பி வருவாராம்.

அதை அறிந்த ஷா தம்மை நொந்து கொண்டிருக்கிறார். மேலும்,

'ஒரு கொலையைச் செய்திருந்தாலும்கூட, என் மனச்சாட்சி என்னை இவ்வளவு வருத்தியிருக்காது. தவறான இசையால் நான் உண்டாக்கிய துன்பத்தை நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை' என்கிறார் ஷா.

## மன்னரை சிறையில் அடை

இந்தியாவில், விடுதலைக் கிளர்ச்சி தீவிரமாக இருந்த போது, பிரிட்டிஷ் ஆட்சியாளர், காந்தியடிகளைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

அப்பொழுது ஷா, "மகாத்மா காந்தியைச் சிறையில் அடைத்த குற்றத்துக்காக ஆறாம் ஜார்ஜ் மன்னரைச் சிறையில் அடைக்க வேண்டும்" என்று மிகச் துணிச்சலாக எழுதினார்.

## இனி அழிவுதான்!

ஒரு சமயம், உலக நாடுகளிடையே அணுகுண்டு ஆபத்து மிகத்தீவிரப் பிரச்சினையாக எழுந்தது. அதைப் பற்றி,

"நாகரிக உலகம் விஞ்ஞானத்தோடு குரங்காட்டம் தொடங்கி விட்டது. இனி அழிவுதான்" என்று எச்சரித்தார் ஷா.

## மனித ஆயுள்

"மனிதனுடைய ஆயுள் மிகவும் குறைவாயிருப்பதால், மனித வாழ்வு உபயோகம் இல்லாமல் போய்விடுகிறது. மனிதன் தேவ ஜீவனம் பெற வேண்டுமானால், குறைந்த பட்சம் மனிதனுக்கு ஆயுள் முந்நூறு ஆண்டுகளாவது இருக்க வேண்டும்" என்று ஒரு நாடகத்தில் கூறுகிறார் ஷா.

## தற்பெருமை

"அவ்வப்போது, என் எழுத்துக்களிலிருந்தே நான் மேற்கோள் காட்டுவது வழக்கம். ஏனெனில் அவை என் எழுத்துக்களுக்கு மிகுந்த சுவையூட்டுகின்றன.

(தம் எழுத்துக்களைத் தாமே பாராட்டிக்கொள்ளும் வழக்கம் ஷாவிடம் காண முடியும்).

## விருந்துக்கு மறுப்பு

பிரபலமான ஒரு சங்கத்திலிருந்து விருந்துக்கு வருமாறு ஷாவுக்கு அழைப்பு வந்தது.

"ஒருவர் மற்றொருவருடன் கலந்து பழகுவதைச் சகித்துக் கொண்டிருப்பதற்காகக் குடித்து, மயங்கவேண்டிய நிலையில் இருக்கும் பணக்காரர்களுடன் ஒரு பிற்பகலைக் கழிக்க நான் விரும்பவில்லை. இந்த உலகில் எதுவும் அத்தகைய நிலைக்கு என்னைத் தூண்டிவிடவும் முடியாது" என்று எழுதி, அந்த விருந்தில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார் ஷா.

## இரண்டு மேதாவிகள்

முன்னர் ஒரு சமயம், இத்தாலியின் தலைநகரான ரோமாபுரியில் அர்ச் பவுள் தேவாலயத்தை பெர்னார்ட் ஷாவுக்கும், பிரான்சின் பிரபல எழுத்தாளர் அனதோல் பிரான்சுக்கும் காட்டி விளக்கிக் கூறினார்கள்.

இந்த இரண்டு எழுத்தாளர்களும் கிண்டலாகப் பேசுவதில் வல்லவர்கள். ஆனால், அவர்கள் இருவருக்கும் அறிமுகம் இல்லை.

இந்த இருவருக்கும் ஒரு சிலையைச் சுட்டிக்காட்டி, "இதுதான் கான்ஸ்டண்டைனுடைய உருவச் சிலை, கிறிஸ்துவ சமூகத்தை முதன் முதலில் தழுவிய அரசர் இவர்தான்" என்றார் வழிகாட்டி.

உடனே, அனதோல் பிரான்ஸ், ஆச்சரியத்தோடு, "கிறிஸ்துவ மதத்தைக் கைவிட்டுவிட்ட கான்ஸ்டண்டைனா" என்றார்.

அப்பொழுது, அங்கே நின்ற கூட்டத்தில் ஷா ஒருவர் தான் அனதோல் பிரான்ஸின் சொற்களை மிகவும் ரசித்தவர்.

அதன் பின், அனதோல் பிரான்ஸ் அதை அறிந்து, தாமே ஷாவிடம் அறிமுகம் செய்துகொண்டு, "ஐயா! நீங்களும் நம்மைச் சேர்ந்த ஆள்தான்" என்றார் ஷா.

ஆம்; நானும் கூட ஒரு மேதாவிதான்" என்றார் ஷா.

## அவர் ஒரு கம்யூனிஸ்ட்

'நீங்கள் எந்தக் கட்சி" என்று ஷாவிடம் ஜேம்ஸ் பிரிடி என்பவர் கேட்டார்.

"நான் கம்யூனிஸ்ட்!" என்று பதில் அளித்தார் ஷா.

## எனக்குப் பங்கு இல்லை

ஷா மது அருந்துவது இல்லை என்பது உலகறிந்த விஷயம்.

"ஒரு நிருபர் ஷாவிடம், "நீங்கள் ஏன் மதுவை வெறுக்கிறீர்கள்" என்று கேட்டார்.

"என்னுடைய குடும்பத்தில் இருந்தவர்கள், என்னைப் போல் பலருடைய பங்கையும் சேர்த்து அவர்களே குடித்துத் தீர்த்து விட்டார்கள். ஆகவே, அதில் எனக்குப் பங்கு இல்லாமல் போய்விட்டது" என்று பதில் அளித்தார் ஷா.

## முட்டாள்தனமானவையா?

ஒரு சமயம், கிரேக்க நாட்டின் தலைநகரமான ஏதன்சுக்கு ஷா போயிருந்தார்.

அந்த நகரத்திலே, புராதன காலத்தில், மிக மிகச் சிறந்த கட்டிடங்கள் அனைத்தும் அக்ரோபாலிஸ் என்ற பகுதியில்தான் இருந்தன. இப்பொழுதும்கூட அந்த இடத்தைச் சுற்றுலப் பயணிகள் போய்ப் பார்த்து மகிழ்ச்சியுடன் திரும்புகிறார்கள்.

ஆனால், அங்கே போய்ப் பார்த்துவிட்டு வந்த ஷா கூறுவதாவது:

"கடைசியில் ஏதன்சு நகரத்தின் முட்டாள்தனமான பழைய அக்ரோபாலிஸையும் அதன் இடிந்தத் தூண்களையும் விட்டு ஒரு வழியாக நான் வந்துவிட்டேன்."

## பெரிய தவறு எது?

"நானும் தவறு செய்யக் கூடியவனே. இன்னும் சொல்லப்போனால், பெரிய எழுத்தாளர்கள் தவறு செய்வார்களானால், அந்தத் தவறும் பெரிய தவறாகவே இருக்கும். கொலம்பஸ் செய்த பெரிய தவறுபோலவே இருக்கும்." (இந்தியாவைக் கண்டுபிடிக்க முயன்று அமெரிக்காவைக் கண்டு இந்தியா என்று மயங்கியவர் கொலம்பஸ்)

## தவறுகளைத் திருத்துதல்

ஷாவின் பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும் காணப்படும் கிண்டல், கேலி, இகழ்ச்சி ஆகியவற்றை அவரே அறிவார். அவர் கூறுகிறார்:

"என் தொழிலே இதுதான். உங்கள் நிலைமையை அறிந்து, உங்களை நோக்கி, நீங்களே சிரித்துக் கொள்ளும்படி செய்வதே என் நோக்கம். சில வேளைகளில் உங்களை முட்டாள்கள் என்று உணர்ந்து கொள்ளும்படி செய்திருப்பேனானால், அதனாலேயே உங்கள் தவறுகளைக் களைந்து திருத்தியுள்ளேன் என்று எண்ணிக் கொள்ளுங்கள். பல் மருத்துவர் உங்கள் பல்லைப் பிடுங்கி எறிந்து, பல்நோயைக் குணப்படுத்தவில்லையா? அது போன்றதே இதுவும்" என ஒரு முகவுரையில் ஷா கூறுகிறார்.

## தீமையை அழிப்பது எப்படி?

"கொடுமை இல்லாமலே தீமையை அழிப்பதற்கு நகைச்சுவையால்தான் முடியும்; இகழ்ந்து கூறாமல் நல்ல இணைக்கத்தை உறுதிப்படுத்தவும் அதனால்தான் முடியும்" என்பது ஷாவின் கொள்கை.

## அவர் வேறு; இவர் வேறு!

ஷா இளமையில் எழுதிய ஒரு நாவலைப் பற்றிக் குறிப்பிட்டபோது அந்த நாவலை தாம் எழுதியதாகக் கூறாமல், "அந்த ஷா 1880–ல் இருந்தவர்; அவர் வேறு; இப்போது உள்ள ஷா வேறு" என்று எழுதிவிட்டு – "எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, உடலில் உள்ள எல்லாம் மாறி, உடலே புதிதாக அமைகிறது; எட்டு ஆண்டுகளுக்கு முன் இருந்த அணுக்கள் பின்னர் உடலில் இருப்பதில்லை" என்று உடல் நூலார் கூறுவதை எடுத்துக்காட்டி – "இந்த நாவல் எழுதிய ஷா 1888–ல் இறந்து விட்டார். அதற்குப் பிறகு, பல ஆசிரியர்கள் அந்த ஷாவைத் தொடர்ந்து இறந்திருக் கின்றார்கள். ஆகையால் இந்த நாவல் எழுதியவர் என்னுடைய முப்பாட்டன் என்று சொல்ல வேண்டும். அவர் எழுதிய நாவலில் நான் ஆர்வம் கொள்ள முடியாது. அந்த ஷாவைப்பற்றி என் நினைவும் மங்கிவிட்டது; இருக்கின்ற நினைவும்கூட எத்தனையோ பொய்கள் கலந்து மாறுபாடாக இருக்கிறது. ஆகையால், அந்த ஷாவைப்பற்றி எனக்குத் தெளிவாகவும்

முழுமையாகவும் தெரியாது" என்று எழுதி, உண்மை தோன்றச் செய்தார்.

## நீதி புகட்டுதல்

இத்தாலி தேசத்தின் மகாகவி தாந்தேயின் நூலின் ஓர் இடத்தில் ஷா,

"காதல் சம்பந்தமாக அல்லாமல், வேறு வகையில் முட்டாள்கள்தான் நட்பு வைத்துக் கொண்டிருப்பார்கள், நாம் வெறுப்பவர்களுக்கும் கூட நீதி புகட்டுவதையே நான் வற்புறுத்துகிறேன்" என்று குறிப்பு எழுதி வைத்திருக்கிறார்.

## எதிர்பார்த்ததே !

நாடக நடிகர் ஒருவருடைய நடிப்பில் சில குற்றங்களைக் கண்டார் ஷா. அதைக் குறிப்பிட்டு அவர் எழுதிய கடிதம்:

"பிறருடைய தொழிலில் நான் ஏன் இவ்வாறு தலையிடுகிறேன் என்று நீங்கள் கேட்கலாம். ஒரு நாடக ஆசிரியர், இவ்வாறு பிறர் வாழ்வில் தலையிடுவதைப் பற்றிக் கேட்கக் கூடாது. ஏனென்றால், பிறருடைய வாழ்வில் தலையிட்டுக் குற்றம் காண்பதுதான் நாடக ஆசிரியரின் கடமை. பிறருடைய வாழ்வுதானே நாடகத்தில் நடித்துக் காட்டப்படுகிறது" என்று குறிப்பிட்டிருந்தார் ஷா.

கடிதத்தைக் கண்ட அந்த் நடிகர், ஆத்திரத்தோடு ஷாவைக் கண்டித்து தன் உணர்ச்சிகளைக் கொட்டி எழுதினார்.

நடிகரின் கடிதத்தைப் பார்த்தார் ஷா. அதற்காகச் சிறிதும் கவலைப்படவிலலை. "மருந்துகொடுத்த மருத்துவர் நோயாளியிடமிருந்து வெறுப்பை எதிர்பார்ப்பதுபோல் நானும் எதிர்பார்த்ததுதான்" என்றார்.

## கூர்மையான பார்வை

ஷாவின் எழுத்துக்களில் காணப்படும் வேறு பாட்டையும், பொருத்தமற்றதையும் குறைகூறுவோர்க்கு ஷா பதில் கூறுகிறார்:

"என் கண்களைப் பரிசோதனை செய்த கண் மருத்துவர் அளவான நிலையில்தான் இருக்கிறது" என்றார்.

"அப்படியானால் என்னுடைய கண்கள், மற்றவர்களின் கண்களைப் போல இருப்பதாகவே கருதுகிறேன்" என்றார் ஷா.

கண் மருத்துவர் அதை மறுத்து, "இல்லை, இல்லை மற்றவர்களின் கண்கள் பெரும்பாலும் இவ்வாறு இருப்பதில்லை. உங்களுடைய கண்கள் தனி ரகமானவை. மிக நல்ல கண்பார்வை இருக்கிறது. அளவான நிலை என்றால் பொருள்களை, உள்ளது உள்ளபடியே பார்த்து அறியும் ஆற்றல் நூற்றுக்குப் பத்துப் பேருக்குத்தான் உண்டு" என்றார்.

அதைக் குறிப்பிட்டு, "அப்பொழுதுதான், நான் கற்பனைகளை எழுதி வெற்றி பெறாததன் காரணத்தை

உணர்ந்தேன். என் முகத்திலுள்ள கண்ணைப் போலவே, என் மனக்கண்ணும் (கற்பனைக்கண்) அளவான நிலையில் இருக்கிறது. பெரும் பாலானவர்களுக்கு மனக்கண்ணும் கெட்டுப் போயிருக்கிறது. அதனால்தான், உலகத்தை கண்டு தான் அறியும் முறை அவர்களுக்குப் பிடிக்கவில்லை" என்று கூறுகிறார் ஷா.

## திரும்பிக் கொள்வார்

நாடக கலைஞர் இர்விங் இறந்துவிட்டார். அவரது உடலை அடக்கம் செய்த சடங்கில் கலந்துகொள்ள வருமாறு ஷாவுக்கு அழைப்பு வந்தது.

"எனக்கு அனுப்பிய அழைப்பை திருப்பி அனுப்புகிறேன். இலக்கியத்துக்கு இர்விங் வாழ்வோடு தொடர்பு இல்லாததைப் போலவே, அவருடைய இறப்போடும் எனக்குத் தொடர்பு இல்லை.

"இர்விங் வந்தால், ஷேக்ஸ்பியர் தன் சவப்பெட்டியில் திரும்பிக் கொள்வார். அதைப் போலவே, நான் வந்தால் இர்விங்கும் சவப்பெட்டியில் திரும்பிக்கொள்வார்." என்று எழுதினார் ஷா.

(இர்விங்கைப் பிடிக்காமல் முன்னர் தாக்கி எழுதியவர் ஷா).

## அறுவை நிகழ்ச்சி

வயலின் இசை நிகழ்ச்சி ஒன்றுக்குப் போயிருந்தார் ஷா. சிறிது நேரம் இருந்தார். வித்துவானின் இசை நிகழ்ச்சியை ஷா ரசிக்கவில்லை.

"வயலின் வித்துவானைப் பற்றி உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டார், நிகழ்ச்சி அமைப்பாளர்.

"இவருடைய இசையைக் கேட்டபோது, ரூஸ்கியின் நினைவுதான் எனக்கு உண்டாகிறது" என்றார் ஷா.

நிகழ்ச்சி அமைப்பாளர் திடுக்கிட்டு, ரூஸ்கி வயலின் வித்துவான் அல்லவே; நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று வியப்போடு கேட்டார்.

உடனே ஷா, " இவர்மட்டும் என்னவாம்?" என்று பதில் அளித்தார்.

## தகுதி பெறாத மக்கள்

பொழுது போக்காக நடைபெறும் விளையாட்டுக்களை ஷா எப்பொழுதும் வெறுத்து வந்தார். "நான் நன்கு சிந்தித்தப் பிறகு இந்த முடிவுக்கு வந்தேன். வெட்ட வெளியான இடத்தில், ஒரு பந்தைக் துரத்திக்கொண்டு திரிவதைத் தவிர, வேறு எதற்கும் இக்காலத்து மக்கள் தகுதி அடையவில்லை என்பதை அறிந்தேன்' என்று கூறுகிறார் ஷா.

## ஷாவின் நாடகம் ஒன்றில் சிந்திய முத்துக்கள்!

❖ வாளைப் பிடிக்க நான் பயன்படுத்தும் உறுப்பு என் கைவிரல், தன்னை உணர்ந்து கொள்ள இயற்கை பயன்படுத்தும் அதன் உறுப்பு என் மூளை"

❖ "உலகின் விருப்பப்படி நாம் நடக்கிறோம், நம் விருப்பப்படியல்ல"

❖ "நான் வீரனையும் வாளையும் பாடமாட்டேன்; அறிவுடைய மனிதனையும் அறிவையும் பாடுவேன்."

# கூடும் சுவையும்

பெர்னார்ட்ஷாவிற்கு ஒரு கண்ணாடிப் பூந்தொட்டியைப் பரிசாகக் கொடுத்து, மேஜைமீது வைத்து விட்டுப் போனார் அவரது நண்பர் ஒருவர். அவர் மறுமுறை வந்தபோது, அந்த பூந்தொட்டி அதே இடத்தில் வைத்தபடியே இருந்தது. அதில் பூவே வைக்கப்படவில்லை.

'என்ன, பூந்தொட்டியை வெறுமனே வைத்திருக்கிறீர்கள் ? உங்களுக்குப் பூக்களைக் கண்டால் பிடிக்காதோ...' என்று கேட்டார் நண்பர்.

அதற்கு, 'எனக்குக் குழந்தைகளைக் கூடத்தான் ரொம்பப் பிடிக்கும். அதற்காகத் தெருவில் காணும் குழந்தைகள் அத்தனை பேருடைய தலையையும் வெட்டி வந்து மேஜை மேல் வைத்து விடுவதா ?' என்று பதிலளித்தார் ஷா !

இம்மாதிரியான கூடும் சுவையும் நிறைந்த 150 நிகழ்ச்சிகளின் குவியல்